THE

SIVAGANADHEEPEKAI

A NEW. TAMIL PROSE.

BY

Srimuth Deviyanantha Swamigal.

FIRST EDITION.

PRINTED BY,

K. RAMASAMY PILLAI,

Propretor of

THE "LAKSHMI VILLASAM" PRESS.

SATTUR.

1923

Copy Right.

Price per Copy As. 8.

R673
N23
177679

உ

தேவிதுணை.

அம்பிகை வரப்பிரசாதியாகிய,

ஸ்ரீமத் இ. தேவியானந்த ஸ்வாமிகள்

திருவாய் மலர்ந்தருளிய,

சிவஞானதீபிகை வசனம்.

இஃது

மைப்பாறை

மிழ் ஸ்கூல் ஹெட்மாஸ்டரும் இந்நூலாசிரியர் சகோதரருமான,

பி. செண்பகநாதபிள்ளையவர்கள்

பரிசோதித்து.

சாத்தூர்

K. ராமச்சாமியாபிள்ளையவர்களால்,

தமது

லெக்ஷிமிவிலாசம் பிரசில், பதிப்பிக்கப்பெற்றது.

Copy Right, Registered.

இதன் விலை] 1923. [அணா 8

உ

தேவி துணை

விளம்பரம்.

இந்தபுஸ்தகம் தேவையானபேர்கள் சாத்தூர் லெக்ஷிமிவிலாசப்பிரஸில்ப்பெற்றுக்கொள்ளலாம். இருபதுபுஸ்தகம் மொத்தமாய் வாங்குகிறவர்களுக்கு ஒரு புஸ்தகம் இனமாய்க்கொடுக்கப்படும். சொர்ப்பக் காப்பிகள்தான் தயாராயிருக்கிறது. இத்துடன் ஷை இ. தேவியானந்தசுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய தேவியின்பேரில் திருவருட்பா, வித்தகவிநாயகர் அந்தாதி, தனிஞானத்திரட்டு, அம்பிகைமாலை, மகாநவமிவிரதநாடகம் என்னும் சரஸ்வதிபூஜை, புராணகண்டனம் இவைகள் தயாராயும் அச்சிலுமிருக்கிறது. சீக்கிரத்தில் வெளிவரும்.

K. ராமசாமியாபிள்ளை,

லெக்ஷிமிவிலாசம் பிரஸ், புரோப்ரைட்டர்,

சாத்தூர்.

உ

தேவிதுணை.

சாத்துகவி.

இந்நூலாசிரியர் சகோதரரும் மைப்பாரை தமிழ்
ஸ்கூல் ஹெட்மாஸ்டருமாகிய.

பி. செண்பகநாத பிள்ளை யவர்களியற்றிய

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

சனகன்முதற்சதுநவர்க்குங் கிலவடத்தே புடையமர்ந்துந்தந்தவுகம்
பனகமுனிவரற்காக மறையுரைத்தும்பபணிசெயும் பதியிப்பாரில
அனகருகமிசையிலங்குந்தாணுவே—தேவியானந்தனாகித்
தினகாணைப்ச்சீவர்கட்குச் சிவ ஞானதிபிகையைச்செப்பினனே.

ஷை யார் சகோதரரும் மைப்பாரை தமிழ்
ஸ்கூல் மாஸ்டருமாகிய.

பி. குமாரசுவாமியா பிள்ளையவர்களியற்றிய

கலித்துறை.

தவயோகஞானத்தகைமைக்கு வான்புவிதான்றுதிக்கப்
பவமேகுஞ் சங்கரன் வாமத்தமைந்த பஞ்சானனமூர்
நவமான சத்தியொரு தேவியானந்தனடியருட்
சிவஞான தீபிகைசெப்பினன் பாரிற்செயல்பெறவே.

பா. சி. சுப்பாநாயக்கரவர்களியற்றிய

வெண்பா.

சிவரூபங்கொண்ட திருத்தேவியானந்த குரு
சிவஞானதீபிகையைச் செப்பினான்—அவமான
கருமமெலாம் நீங்கியிருகாசினியோரெப்போதும்
தருமமுடன் வாளவினித்தான்.

உ

தேவி துணை.

முகவுரை.

உலகத்தின்கண்ணுள்ள ஒவ்வொருவரும் ஞானத்தையடையவேண்டுமென்று ஆவல்கொண்டிருந்தபோதிலும், அவரவர்களுடைய பூர்வஜன்மங்களின் கர்மமானது ஞானமார்க்கத்திற்குறிய அறிய நூல்களை வாசிக்கவிடாமல், நாவல்கள், வீண்சரித்திரங்கள், அருவருக்கத்தக்க நாடகங்கள், அகடவிகடமான குபித்திக்கதைகள், முதலியவற்றை வாசிக்கச்செய்து அஞ்ஞானமென்னும்படுகுழியில் வீழ்த்தி தருமமுதலிய சற்கருமங்களைச்செய்து சிவ வழிபாடலையற்றி அதனாலெய்தும் சிவயோக பயனையடையவொட்டாமல், மாயா சாகரத்தில் அலைந்து கொண்டிருக்கச்செய்யும். ஆதலால் பூர்வ சுத்தவாசனையில்லாதவர்களும், இந்தஜென்மத்திலாகிலுமேற்காட்டிய நாவல்கள் முதலிய அருவருக்கச்செய்யும் அசங்கியமான சரிதைகளை வாசித்து வீண்காலம்போக்கி இகத்திலும் பரத்திலுந் துன்பமடையாமலிருக்கும்பொருட்டு நல்லொழுக்கத்தையும், தர்ம சிந்தனையும், நற்பயனையும அளித்து ஞானத்தையுங் கொடுத்து மேலான சாயுச்சிய பதவியை அடையச்செய்யும்பொருட்டாக சுருதிப்பிரமாணத்திற் கொத்தபடி மேற்கோள்களுடன் சிவஞான தீபிகையென்னுமோர் அறிய நூலை வசனரூபமாக, பெரியவர்கள், சிறியர்கள் பெண்பாலர்கள் முதலிய யாவர்களும் எளிதில்ப் பார்த்துணரும்படிக்கிதக சுலபமான செந்தமிழ் நடையில் செய்யப்பட்டு வெளியிட்டிருக்கின்றனம். இந்நூலை யாவரும் பார்த்துணர்ந்து உய்தி பெறக்கடவீர்களாக. சுபம். சுபம். சுபம்.

உ

தேவிதுணை.

சிவஞான தீபிகை.

வசனம்.

வெண்பா.

இனிய கருணை முகிலம் பெருமான் முக்கட்
கனியமிர்த வாரியின்பக்கட்டி—தனிமுதல்வன்
நித்தன் பரமனிமலனிறைவாய் நிறைந்த
சுத்தனமக் கென்றுந் துணை.

முக்கிய வேலைகள்.

அநாதி நின்மல முத்த சித்துருவாகிய சிவபெருமான் ஒருவரே, பரமபதி ஆன்மாக்களாகிய நாமெல்லாம் அவருக்கு மீளாவடிமைகள். ஆன்மாக்கள் பிறப்பிறபிற்பட்டுழலுந் தன்மையையுடையவைகள் ஆதலால் அங்ஙனம் பிறப்பிறப்பென்னும் அல்லலுட்படாது பேரின்பச் சிவபோகம் அநுபவித்தற்கு முக்கிய சாதனமாயுள்ளது சிவவழிபாடொன்றேயாம். இவ்வழிபாடியற்றினாலன்றி மற்றெவ்வாற்றானு முத்தி சித்தித்தலரிது. ஆதலால் மானிடப் பிறவியைப்பெற்ற நாமெல்லாம் அவ்வழிபாடியற்றி அதனாலெய்துஞ் சிவபோக பயனையடைய முயலுதலே நமக்குரிய முக்கியமான வேலையாம். இங்ஙனமாக நம்மவருட் பெரும்பாலார் இதனை எட்டுணையுஞ் சிந்திப்பதில்லை. நமக்கு இவ்வுடல் பொருளாதியன எதன் பொருட்டுக் கிடைத்ததென்றும், இச்சரீரமுள்ள பொழுதே நாம் செயற்பாலனவாகிய உத்தமச் செயல்கள்தான்யாவை யென்றும்

உய்த்துணரும் வலியிலராய் இரவு பகலாய்ப் பொன் பொருள் விளைநிலமாதியவற்றைத் தேடுதலும், உடம்பை வளத்தற்கேற்ற இனிமையான பதார்த்தங்களைச் சேமித்துவைத்துண்ணுதலும் நல்ல ஆடையாபரணாதி கலவைகளையணிதலும், மாதரோடுறவாடி மகிழ்தலும் இவைபோன்ற பிறவுமேதாம் செய்யத்தக்க முக்கியமான வேலையென்றும், கடவுளை வழிபடுதல் பயனிலாச்செய்கையாமெனவுங்கூறித் தம் வாணாளை வீணாக்கிப் பாவத்துக்காளாக்கித் திரிகின்றார்கள். வேறு சிலர் கடவுளை வழிபடுவார்போல் விபூதிருத்திராக்கதாரணங்களாலும், அனுஷ்டான செபதவமாதியனவற்றாலு நடித்துக்காட்டுவதேயன்றி மற்றைப் பொய்ப் பொருளாகிய மண் பொன் பெண் முதலியவற்றில் தமக்குள்ள அபிமானத்திலும், அன்பிலும் நூறாயிரத்திலொருமடங்காயினும் கடவுள் வழிபாட்டில் வைத்து அந்தரங்க சுத்தியோடு செய்வதில்லை. அன்பிலலார் செய்கை வாசனையற்ற முருக்க மலருக்கொப்பாவதாம். ஆனதுபற்றியே, அன்பகத்தில்லாவுயிர் வாழ்க்கை வன்பார்க்கண் வற்றனமரந் தளிர்த்தற்று என்றார். தெய்வப்புலமையும் திருவருண்ஞானமுங் கைவரப்பெற்ற சைவத்திருவாளராகிய திருவள்ளுவ நாயனார் இனி உண்மையாலன்றி வேடமாத்திரையாற் சிவவழிபாடு செய்வார் எவ்வாற்றானும் பயன் பெறாரென்பது நிச்சயம். உண்மையிலரசனின்றி நாடகத்தொழில் புரிந்து திரியும் விடனொருவன் ஏகசக்ராதிபதிபோல் வேடந்தரித்து அரசாங்கங்களோடு பல்லாயிரவர் நடுவில் நடிப்பானாயினும் அவன் உண்மையான அரசனடையும் இன்பத்தையும் பெருமையையும் அடைவானா? அன்றி அடைந்தவனாகப் பிறராலாயினு மதிக்கப்படுவானா? யாதுமின்றே. அன்றியும் அந்தரங்க சுத்தியோடு வழிபாடியற்றாதார் செயலை எம்பரமபதியுணர்ந்து அவனையருவருத்துச் சீரித்து அவ்வழிபாட்டை யேற்கக்கூசித் தூரத்தே நிற்பர். நெஞ்சிற்றுறவார் துறந்தார்போல் வஞ்சித்து வாழ்வாரின் வன்கணாரில் என்றும் நிறைந்திடக் குடத்தில் மலமுறப் புறத்தினீர் கொடுகழுவினானி கர்ப்ப அறந்துடைத்தன்புந் துடைத்த தம்முளத்திலருமலமிருக்கத் தண்புனலார் புறந்துடைத்தங்க முழுதும் வெண்ணீற்றைப் பூசணிக்காயெனப் பொதிந்து பறந்து பற்பலர் கைப்பொருள்கொளச் சைவப்பழங்கள் போன்ற வரிவர்

பலரால் என்றும் ஆன்றோர் கூறியவண்ணம் எம்பரமபதிவிடத்து அன்பின்றி வேடத்தைமட்டும் வகித்துத்திரிகின்றது ராசார புருஷர்களடையும் பிரயோசனம் யாது மின்றே.

நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும் பொன்னார் சடைப் புண்ணியன்
பொக்கமிக்கவர் பூவு நீருங் கண்டு
நக்குநிற் பரவர் தமை நாணியே.

எனவரும் திராவிடச் சுருதியாற் பெறப்படும். இங்ஙனம் செய்பவர் முன்கூறப்பட்டவரினும் மிக்கக் கொடியவரே யாவர். இங்ஙனம் இவர் செய்தல் அறியாமையும் மௌட்டிகமுமாமன்றிப் பிறிதென்னும் வேட மாத்திரையாற் செய்யுங் கபட வழிபாட்டையறியச் சக்தியில்லாதாரொன்று இவர் நினைந்த கடவுள் இவரது வழிபாட்டை யேற்று இவர்களுக்கு நல்லருள் பாலிக்குமென நினைத்த பேதமையை நினைக்க நினைக்கச் சிரிப்புந் துக்கமுமுண்டாகின்றது. இவர் எமது பரமபதி வஞ்சனையாலஞ்செழுத்தும் வழுத்துவார்க்குச் சேயான் என்னும் ஆப்த அருள் வாக்கியத்தையறியார் போலும். அந்தோ! பரிதாபம். பரிதாபம். நண்பர்களே! நாம் பெற்றுள்ள இச்சரீரம் நீரிற்குமிழிபோல நிலையற்றதெனப் பெரியோர்கள் கூறியிருக்கின்றனர். அங்ஙனமே நாம் பிரத்தியக்ஷமாயும் காண்கின்றோம்; இதுகாறும் குபேரனை நிகர்த்த பொருள்களையும், தேவேந்திரனை நிகர்த்த இன்பங்களையும் பெற்றிருந்த எத்தனை முடிதாங்கு மன்னரு மற்றுமுள்ளோரும் பிடிசாம்பராய் வெந்து மண்ணாயினர். அன்றியும் தமது சரீரத்தைப் பலவகையாலும், வச்சிரஸ்தம்பத்துக்கொப்பாய் பலப்படுத்தி யாதும் ஏதம்வாராது பாதுகாத்துவந்த அதிசூரர்களும் வினைவசத்தால் அவ்வுடல் நாய் நரி கழுகு காக்கை கட்கு விருந்தாமாறு செத்தொழிந்தனர்.

பூக்கைக் கொண்டரன் பொன்னடி போற்றிலார்
நாக்கைக் கொண்டரனுமம் நவிற்றிலார்
ஆக்கைக்கே யிரை தேடியலமந்து
காக்கைக்கே யிரையாகிக் கழிவரே.

வேறு யாவசாயினும் தாம் தேடிய செல்வப்பொருள்களுட் கிறிதையாயினும் தாம் மிக்க அபிமானத்தோடு பாது காத்து வந்த சரீரத்தையாயினுங்கொண்டு செல்ல யாண்டுங்கண்டதுங் கேட்டது முண்டா, இன்றே! இங்ஙனம் வானத்தின் மின்போன்று தோன்றி யொழியுந் தன்மை தான் நிலையிலாச் சரீர முதலிய பொன் பொரு ளாதியவற்றையும் நிலையுடையதெனக்கொள்வது எத்தனைமதியீனம் நிலையுடையவான்மாவுக்கு நிலையான இன்பத்தையளிக்க வல்ல நிலை யானகாரியத்தைச்செய்வதன்றோ நன்மதியாம், நண்பர்களே! சற்று சிந்தித்துப்பாருங்கள், நால்வகைத் தோற்றம். எழுவகைப்பிறவி எண்பத்துநான்கு லக்கம் யோனி பேதங்களாயுள்ள ஆன்மவர்க்கங் களிலே தாவரம், நீர்வாழ்வன், ஊர்வன், பறவை, விலங்கு முதலிய கீழ் நின்ற பிறவிகளையெல்லாம் நீக்கி மேலாகிய இம்மானிடப்பிற வியை யடைவது மிக அருமையானது. இது பற்றியன்றோ எமது தாயுமான சுவாமிகள் எண்ணரிய பிறவிதனில் மானிடப்பிறவி தான் யாதினுமரிதரிது. என்று திருவாய் மலர்ந்தருளியது, அன்றி யும் மற்றைப் பிறவிகளையெல்லாம் கடந்து மானிடப்பிறவியை யெய் துதலாகிய அருமை கடலைக் கையினுனீந்திக் கரைசேர்ந்தார் போல் வதாம். இதனை

அண்டசஞ்சுவேத சங்களுற்பிசஞ்சராயுசத்தோ
டெண்டரு நாலெண்பத்து நான்கு நூறாயிரத்தா
யுண்டபல்யோனி யெல்லாங்கடந்து மானிடத்துதித்தல்
கண்டிடில் கடலைக் கையானீந்தினர் காரியங்காண்.

எனவரும் சிவஞான சித்தித்திரு விருத்தத்தாலறிக. இங்ங னம் அருமையினு மருமையாகிய இம்மானிடப் பிறவியைச் சிவ பரமபொருள் நமக்களித்தது. அவனை வழிபட்டு பிறப்பிறப்பென் னும் அல்லலினின்று நீங்கிப் பேரின்ப வாழ்வையடையும் பொருட் டேயாம். இதனை மானிடப்பிறவிதானும் வகுத்தது மனவாக்காயம் ஆனிடத்தைந்து மாடுமரன்பணிக்காகவன்றோ. என்னும் சைவப் பெரியோரது திருவாக்காலறிக. இதுகாறுங் கூறியவாற்றால் அரு மையாகிய இம்மானிடப்பிறவியைப் பெற்றால் யாவரும் சிவவழிபா டியற்றி அதனாலெய்தும் பிரயோஜனத்தைப் பெறாது போலி யுக்தி

வகையால் அதனை யவலம்பித்தலைதல் தகாதென்பது நிலைநாட்டப் பட்டது, இனி முழு முதற்பெருங்கடவுளாகிய சிவபெருமானை வழி படும் வேலையோவெனின் அது இம்மைக்கும் அம்மைக்குந்துணை யாய் நின்று நற்பயனளிக்கவல்லதாம். சிவபரஞ்சுடரை நாம் வழி படுவோமாயின அவர் திருவருளை நமக்குத் தந்தருளுவார். அதை நாம் பெறின் அதனால் நம்மை அனாதியே பந்தித்துவருத்தும் ஆணவம், கன்மம், மாயையென்னும் மும்மலத்தொடக்கு நீங்கும் அவை நம்மை விட்டொழியின் அஞ்ஞான பந்தத்தாலும், பிறப்பிறப்புகளினாலும் அவற்றாலெய்தும் இன்பதுன்ப நுகர்ச்சியினாலும் நாம் வருந்தவேண்டியதின்று. அது வொன்றோ எக்காலத்தும் அழிவில்லாத சிவஞானத்தையடைந்து சிவபெருமானோடு இரண்டறக்கலத்தலாகிய பரமானந்தப் பெருவாழ்வையு மடைந்திருக்கலாம்.

நண்பர்களே! இங்ஙனம் கூறிய இரண்டனுள் உங்கட்கு முக்கியமான வேலையாதெனத் தோன்றுகின்றது. சிவபெருமானது திருவருளைப்பெற்று நித்தியானந்தமுற்றுப் பிரியாப் பெருவாழ்வடைதலேயன்றோ. இங்ஙனமே வந்து முக்கியமான வேலையைச் செய்யாது நாம் நமது வாணாளை வீணாகக் கழிப்போமானால் உய்தி கூடுதல் யாங்ஙனம். ஆதலால் இப்பொழுதே சிவவழிபாடு செய்ய முயலவேண்டும். நாளைச்செய்யலாமென்றிருத்தலடாது.

காலைச்செய்வோ மென்றறத்தைக் கடைப்பிடித்துச்
சாலச் செய்வாரோ தலைப்படுவர்—மாலை
கிடந்தா னெழுவதறிதாமற்றென் கொலான்
காலை செய்யாத வாறு.

என்னும் ஆப்தவாக்கியத்தின் வண்ணம் நாளை நம்முடமுறை நாளாவது மறியோம். நமனுடமுறை நாளாவது மறியோம். அன்றியும் அங்ஙனம் நமன் வருங்கால் நம்மால் யாதுஞ் செய்யாவிடினும். நமது சிநேகிதர், மனைவி, மக்கள் உறவின்முறையாராயுள்ளாராயினும், அவனைத்தடை செய்யாரோவெனின்.

கொல்லத்தானமன் றாதுவர் வந்தாக்கால்
இல்லத்தார் செயலாவதென்.

யாவராலுந் தடுத்தற்கரிது அரிது அன்றி சிவவழிபாடு செய்தல். இப்பொழுது கூடாவிடினும், மறுபிறவியிலாயினும் அங்ஙனம் செய்து உய்திபெறலாமென நினைப்பின் இப்பிறவிதப்பினுலெப்பிறவி வாய்க்குமோ யாது வருமோ அதையுமறியோமே. அன்றி இயமதூதர்கள் நம்முயிரைக்கொண்டு சென்று நாம் இம்மையிலியற்றிய பாவவினைக்குத்தக்கவாறு நரகத்தில் வீழ்த்தித் துன்புறுத்துவார்களே அதுவொழிந்தாலும், அசரப்பொருள்களில் ஓர் தாவர முதல் விலங்கீறுகிய சரீரங்களையடையப்பெருவோமாயின் அங்ஙனம் எவ்வழிபாடு செய்வோம். வேறுதான் என் செய்யவல்லோம். அன்பர்களே! இவைகளையெல்லாம் நாம் நன்குயோசித்து பார்ப்பதாவசியகம் நாம் உள்ளபடியே சிவவழிபாடு செய்யத்தவறுவோமாயின் இவ்வல்லல்களினின்று நீங்குதல் கூடா. சமுத்திரத்தின் மத்தியில் வீழ்ந்தலமருவானொருவன் ஓர்புணையின்றிக் கரைசேருதலெங்ஙனம் கூடும். அவ்வாறே பிறவி என்னும் பெருங்கடலினடுவே வீழ்ந்து அவாவென்னும் அலைகளால் மொத்துண்டு மாயை யென்னும வன்சுறாபுகளாற்றுன்புறுத்தப்பட்டு அஞ்ஞானத்தாற் கண்மூடப்பட்டு யாதுந் துணையின்றிப் பரிதவிக்கும் நாம் யிருவினைப்பாசமும் மலக்கல்லார்த்தலின் வருபவக்கடல் விழுமாக்களேறிட அருளும்.

எமதம்மையப்பனுகிய சிவபெருமானது திருவடித்தொண்டு செய்து அவனருளாமதிப்பிய புணையைப் பற்றிக் கொண்டாலன்றி உய்திகூடுதல் கூடாது. ஓர் போதுங் கூடாது ஆனதுபற்றியன்றோ பிறவிப்பெருங்கடனீந்துவர் நீந்தார்ரிறைவனடி சேராதார் எனப் பொய்யாமொழித் தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனாருளிச் செய்தனர். ஆதலால் நண்பர்களே! நாம் இனி அணுத்துணைப்போதாயினும் வீண்காலங்கழியாது சிவபெருமானது திருவடிக்கமலங்களை அவனருளியவேதாகமவிதிப்படி மெய்யன்போடுவழிபட்டு அவனது திருவருளுக்குப்பாத்திரமாய் உய்திகூட முயல்வதே நாம் செய்யவேண்டிய முக்கியமான வேலையெனச் சிந்தித்து அங்ஙனமேசெய்ய முயல்வோமாக.

தேவாரம்.

உரைதளர்ந்துடலார் நடுங்காமுனம்
நரைவிடையுடையானிட நல்லமே

பரவுமின்பணி மின்பணிவாரோடே
விரவு மின் விரவாரை விடுமினே.

நன்று நாடொறு நல்வினைபோயறும்
என்று மின்பம் பெருகவிருக்கலாம்
சென்று நீர் திருவேட்களத்துள்ளுறை
துன்று செஞ்சடை யானைத்தொழுமினே.

அறஞ் செய்வதினாலடையும், பலன்.

அதிக வளப்பம் பொருந்திய குபேரன்பட்டினத்தைப்போன்ற ஓர் நகரமும், அதிகக் குறைவுடைத்தாகிய மிடியால் வருந்துகின்ற ஓர் நகரமும் பூமியின்கண் இருந்தது. அப்படியிருக்குங்காலையில் ஓர் நாள் கைலாசத்தில் பரமேஸ்பரனும் பார்பதியும் யேகாந்தமாய்ச் சந்தோஷகரமுற்றிருக்கும் பொழுது ஈஸ்பரி ஈஸ்பரனை நமஸ்கரித்து சுவாமி தேவரீருடைய கருணையானது அண்டபுவன சராசரங்கள் யாவற்றுக்கும் பொதுவாயிருக்க ஓர் நகரம் வளப்பம் பொருந்தியும், ஓர் நகரத்தின்கண் ஜனங்களெல்லாம் பசிதாகத்தால் துன்புற்றிருக்கக் காரணம் அடியாளறியும் பொருட்டுத் திருக்கருணையிரங்கப் பிரார்த்திக்கின்றேனென அப்பொழுது ஈஸ்பரன் வாராய் பெண்ணே, அக்காரணத்தை அந்தந்த நகரத்துக்கேகி காட்டுகிறேன் வாவென, இருவர்களும் விருத்தாப்பியமான பிராமணவடிவங்கொண்டு காசி முதலிய ஸ்தலங்களுக்குப்போய் வருகின்றவர்களைப்போலக் கங்கை நிறைத்த காவடியும், பீத்தற்குடையும், கிழிந்தவேஷ்டியும் கையிற் கோணத்தடியுமாக உடல்மெலிந்து நடை தள்ளாடி பசிதாகத்தால் வருத்தமடைந்து ஒருவர் கையையொருவர்பிடித்துக்கொண்டு தடுமாறித் தடுமாறித் தத்தளித்து விக்கலும் இருமலும் அடிக்கடிவர மெள்ள மெள்ள நடந்து குபேரன்

பட்டினத்தைப்போன்று செழிப்புற்றிருக்கும் நகரத்திற்கு வந்து சேர்ந்தனர்கள். அந்நகரமானது எங்கே பார்த்தாலும் அடிப்பு மறுப்புங்காலூன்றி நடக்கயிடமின்றி நவதானியங்களும் வீடுகள் தெருக்கள் களங்கள்தோறுங் குன்றுகள் போல அண்டமளாவியிருக்கவும், ஜனங்கள் ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் அவரவர்களணிந்திருக்குமாபரணாதிகளின் பழுவான பாரத்தால் ஆதிசேஷனும் பூபாரம் பொருக்கத்திகைத்து பாதாழத்தடங்கியொடுங்கியிருக்கவும் பார்த்து ஓர் பெரிய பிரபுவின் வீட்டையடைந்து ஓ பிரபுவே யாங்கள் இந்த விருத்தாப்பிய திசையில் காசி முதலான ஸ்தலங்களுக்குப்போய் வருகிற மார்க்கத்தில் அதிகப்பசியினால் வருத்தமடைந்து நும் சரணமடைந்தோம் கிருபைசெய்தெங்களுக்கேதாவது கொஞ்சம் உணவு அளித்தால் களைப்பாற்றிக்கொண்டு பிரயாணத்தைச் செய்து கொள்வோமென மிகத்தாழ்ந்து கெஞ்சிக் கேட்க, உடனே அப்பிரபு கோபமுற்று பைத்தியங்கொண்ட கிழட்டுப்பிராமணா கொஞ்சங்கூட அறிவில்லாமல் யாமிருக்குஞ் சமையம் பாராமலுணவு வேண்டுமென்று கத்துகின்றனை நீ கேட்குஞ் சமையமிதுவன்று. யாம் வந்த அகுதி பரதேசிகளுக்கு அமுதளிக்கும் வழக்கமுமன்று. ஆகையால் எம்மெதிர் நில்லாமற் சீக்கிரம் வெளியில் யேகுகவெனச் சொல்லிப் பிடரியைப் பிடித்துத்தள்ளியடித்துத் துரத்திவிட்டனன்.

கவி.

சிறியரோ போற்றுஞ் செல்வச் செருக்குவந்துற்றனோன்றே
வறியவச் செருக்குமூடி வாயுளாருமையாவர்
பறிதறிகாதுளாரும் பயனிலாச் செவிடராவர்
குறியறி கண்ணுளாருங் குருடாய்த் தோன்றுவாரே.

உற்றசிறுதருமமெனு முளுற்றிடாரெதிகள் வந்தும்பார்கோனே
பெற்றதரு நிகர்காத்தாயென்றுமே பேசிடினும் பெருமையுற்று
கற்றகலையளவாகக் கருணைசற்று மில்லாமற் கடக்கப்போவர்
அற்றவர்க்குமீயாத யிவர் பெற்ற செல்வந்தானாருக்காமோ.

அப்பால் கிழப்பிராமண உருவமடைந்த பரமசிவமதி சந்தோஷமடைந்து அம்மையுடன் அடி முதலிய சிரமங்களை யேற்றுக்கொண்டு வெளியில் வந்து இப்பிரபு இப்போதடைந்திருக்கிற செல்வங்களைப்பார்க்கிலும் நூறுமடங்கு செல்வமுதலிய யாவற்று மடையக்கடவதென்று ஆக்ஞாபித்துவிட்டு அந்நகர் தூரந்து முற்கூறிய மிடியால் வ்ருந்துகின்ற நகர் நோக்கி வரும்போது அம்மைக்கதிகோபம் பிறந்து இப்படியுமோர் பிரபுவை தேவரீரமைத்திருப்பதாச்சரியமென சுவாமியிடந் தெரியப்படுத்த உமையே, கோபத்தைத்தாழ்த்து பின்னால் வருவதைப் பார்த்துக்கொள்ளென உத்தரவளித்து மிடியால் வருந்தும் நகர்வந்தடைந்து அந்நகர்வாசிகளிலதிதார்த்தரியமடைந்து கொண்டிருக்கிற ஓரோதுவார் வீடு சென்று அன்பனே யாங்கள் வெகு தூரத்திலிருந்து வருவதாலும், கிழப்பருவமாயிருப்பதாலும், பசிதாங்காது வருத்தமடைந்தோம். நீ தயவுசெய்தேதாவது கொஞ்சஞ் சீக்கிரமன்னங் கொடுக்காத விஷயத்தில் எங்கள் பிராணனுக்காணி நேரிடும்போலிருக்கிறதெனத் தெரிவிக்க

கவி.

ஆடு மாடு தேடினும் ஆனை சேனை தேடினும்
கோடிவாசி தேடினுங் கூறுக்கே வந்து நிற்குமோ
ஓடியிட்ட பிச்சையுமுகந்து செய்த தர்மமும்
சாடிவிட்ட குதிரை போல தர்மம்வந்து நிற்குமே.

என்ற ஆன்றோர் வாக்கியத்தையுணர்ந்தவராயுமிருக்கின்ற.

திருவிருந்த மருதவயற் செந்நெல்லின்
முளைகொணர்ந்து—சிவனுக்கன்பரய்ப்
பெருவிருந்து முன்னொருவன் செய்ததுவே
கடைப்பிடியாய்ப் பிடித்துத் தாயார்
கருவிருந்து வரும்பொழுதே சைவநெறி
நல்லொழுக்கம் கைக்கொண்டெய்தி
வருவிருந்து புரந்து மகிழ் ஓதுவார்
பெருமைதனை வழுத்துவோமே.

உடனே அவ்வோதுவாரவர்களிருவரையு மன்புடன் பணிந்து
நமஸ்கரித்துத் தேவரீரடியேன் பேரிற் பரிபூரண கிருபைசெய்து
நானமுதுகொண்டுவருமளவு மெனது ரவிபுகுந்துலாவும்படி கூரை
பிரிந்து முட்காரச் சரியான யிடமின்றியுமிருக்கிற ஏழையினில்லத்
திலெழுந்தருளியிருக்கும்படி செய்து விட்டு வீட்டிற்குட் புகுந்து
கட்டிக்கொள்வதற்குச் சரியான புடவையின்றி வெளியில்வர நாண
முற்றிருக்கின்ற தன்மனைவியை நோக்கி எனதன்பிற்கினிய பெண்
கள் நாயகமே காசியாத்திரைபோய் வந்திருக்கின்ற மூதிர்ந்த வேதி
யருக்கும், அவர் மனைவியாருக்கும் பசிதீவிரமாயிருப்பதாற் கொஞ்
சமமுதுகொடுத்துதவவேண்டுமென யாதொன்றுமில்லாமல் வெறு
மைமயாயிருக்கிற அம்மாது திகைத்து வருத்தமுற்று எனது பிரா
ணநாயகரே, நீர் காலையிற் கொணர்ந்த கோவில்ப்படித்தர நாலுகட்டி
யமுதையும் குழந்தைகள் புசித்துவிட்டதினால் நம்மிருவரும் யா
தொரு உணவின்றியிருக்கின்றோம். அவர்களுக்கு எங்ஙனமன்ன
மளிப்பேன் என்னிடம் மாங்கிலியம் இரண்டு சிறகு முன் சிலவா
னதுபோக நடுநாயகமொன்று மீதியிருக்கின்றது அதைத்தருகி
றேன் விரவில் கடைக்குக்கொண்டுபோய் விற்று அரிசி முதலிய
சாமான்கள் வாங்கி வந்தால் ஓர் நிமிஷத்தில் சமையல்செய்து அவ்
விருவர்களின் கொடிய பசியை யாற்றிவிடலாமென் மொழிந்து மா
ங்கிலியத்துக்குப் பதிலாக ஓர் மஞ்சட்துண்டைக் கழுத்தில் கட்டிக்
கொண்டு மாங்கிலியமொன்றைக் களத்திக்கொடுத்தனள்: அதை
ஓதுவார் மனமகிழ்ச்சியுடன் வாங்கிக் கடைக்குத் தீவிரமாகச் செல்
லுகையில் பரமசிவத்தின் அற்புத மகிமையால் மென்றும்பெய்யாத
அற்புதமாகிய மழையானது யானைத்துதிக்கையால் பொழிவதுபோ
லப் பொழிந்தன, அதனாற்பிரவாகங்கள் போகவொட்டாமற்றடு
த்ததுமன்றி கடைகளெல்லாமடைபட்டுப்போயிருக்க ஓதுவார் வெ
குபிரயாசையுடன் வெள்ளங்களில் நீந்தி கடைத்தெருபுகுந்து
ஒவ்வொரு கடையும் திறக்கப்படாமலடைபட்டிருப்பதைக்கண்ணு
றறு வருத்தமுங் கிலேசமுமடைந்து இனியேது செய்வோமெ
ன் வெருங்கையனாய் வீட்டுக்குத் திரும்பிவந்து தன் மனைவியிடம்
நடந்தசெய்தியைச்சொல்லி இனியாது செய்வோம் வேதியர் பசிதீர
ஒன்றும் நம்மிடமில்லையே நமது ஒரு பசுவில்கறந்த ஒருபடிபால்
காய்துகொண்டிருக்கிறதல்லவா, அதைத்தான் கொடுத்துப் பெரி

யகர்களின் பசியாற்ற வேண்டுமெனக் கருதி வேதியரிடம் வந்து அடிபணிந்து நமஸ்கரித்து அடியேன் மிடியனுயிருப்பதால் இச்சமையம் சுவாமிகளின் பசியாற்றுவதற்கு வேறுணவு அமையாததால் காய்ச்சித்தயாரிலிருக்கின்ற ஒருபடி பசுவின் பாலை யிருவர்களு மருந்தித் திருப்தி செய்துகொள்ள உத்தரவாகவேணுமெனப் பிரார்த்திக்க வேதியராகிய பரமசிவம் சுடுபால் யாங்களருந்தோம் எங்கள் பார்வையில் நீ கரந்துகொடுப்பாயாகில் பசிதீர்ந்து களைப்பாருவோம் மறுபடியும் கன்றைபவிழ்த்து விட்டுப் பால்கரந்துகொண்டுவாவென உத்தரவளிக்க ஓதுவார் முன்கரந்த பசுவில் மறுபடியுங் கன்றைவிட்டுத்தெய்வச்செயலால் ஒருபடிபால் வழக்கம்போல் கரந்து வேதியர் கையிற்கொடுக்க அவரதைப் பூராவுமருந்திவிட்டுத் தன் மனைவிக்கு இனனம் ஒருபடிபால் கரந்துவாவெனச் சொல்ல இதுவுந் தெய்வ சோதனையென நினைத்துச் சிவபெருமானை ஸ்துதித்துப் பின்னுங் கன்றையவிழ்த்துவிடக் கன்று வழக்கப்படி பால்சுவைக்க ஒருபடி. பால் கரந்து அம்மையிடங் கொணர்ந்து கொடுக்கச் சாப்பிட்டிருவர்களுங் களைப்பாறி விடை பெற்றுக்கொண்டு கைலைக்குப் போகும் போது இவ்வோதுவானுடைய மனைவி, குழந்தைகள், பசு, அடிமையெல்லாம் இறந்துபோகக்கடவது யென்று வேதியராகிய பரமசிவம் சாபங்கொடுத்துச் சென்றனர். அப்போது கருணைக்கடலாகிய பரமேஸ்பரி, மகாயிரக்கமுடையவளாய்ச் சுவாமியை நோக்கி மிகுந்த செல்வமுடையவன் கொஞ்சமமுது கொடுக்க மனமில்லாமல் வெளியிற்போங்களென்று துரத்தியதுமன்றி தேவரீருடைய திருமேனியைக் கொஞ்சமுமச்சமின்றித் தீண்டி அடித்துத் தள்ளிவிட்டவனுக்குச் செலவம் முன்னினுமதிகம் பெருகட்டுமென்றும், யாதொன்றுமில்லாது நிஸ்கதியாயிருந்தும் நமக்குப்பசி தீரும்பொருட்டு எவ்வளவோ பிரையாசைபெடுத்து கற்பிற்சிறந்த சிரோன்மணியாகிய மனைவி மாங்கிலியத்தைக்கொடுக்க அதை வாங்கிக் கடைதோருஞ்சென்றலைந்து விலைபோகாமல் வருந்தி வேறு வழியில்லாமல் பசுவம்பால் கரந்துகொடுத்துப் பசியாற்றிய மஹா புண்ணியவானுடைய மனைவி, குழந்தை முதலிய யாவற்றுமிறந்துபோகச் சாபங் கொடுத்தருளியது அடியாளுணரும்பொருட்டுத் திருவுளமிரங்கப் பிரார்த்திக்கின்றேனென அடிபணிய பரமசிவங் கருணையுற்று வர

சாயுஜ்யபவளே, மேற்கண்டயிருவர்களுக்கும் கொடுத்திருக்கின்ற
சாபங்களின் விசேடங்களைப் பின்னாலறிவாயென ஆக்ஞாபித்துக்
கைலைவந்தடைந்து சகல தேவர்களும் புடைசூழச் சிம்மாசனமமர்
ந்தனர்கள். இது நிற்க வேதியர்பாலருந்திப்போன மறுநாளஞ்ச
மனமாவதற்குள்ளாக ஒதுவாருடைய மனைவி குழந்தைகள் அடி
மைகள் பசு முதலான சமஸ்தமுமிறந்து கிடந்தன. யெஞ்சிய ஒது
வாரிவ்வாச்சரியத்தைப் பார்த்திஃதீசன் செயலல்லாது வேறில்லை
யினி நமதுயிர் வைத்திருப்பதிற் பலன் யாது, ஓர் கிணற்றில் வீழ்
ந்திறப்பதே ஞாயமெனத்தொணிந்தொவ்வொரு கிணற்றிற்கும்போ
ய்ப்பார்க்கையிலங்கங்கே மனுஷாளிருப்பதைக்கண்டவைகளை யெல்
லாம் விட்டு நீங்கித் தன்னூருக்குப் பத்துமைல் தூரத்திற்கப்புற
மிருக்கிற அச்சமையமாளில்லாத ஓர் காட்டுக்கிணற்றை யடைந்ததி
ல்விழுந்துயிர் தூரக்கப் பார்க்கையிலக்கிணற்றிற்குள் குரங்கொ
ன்று, பாம்பொன்று, கடுவாயொன்று, இம்மூன்றும் விழுந்து மல்
லாடிக்கொண்டிருந்தவைகளோதுவாரைப் பார்த்து ஓ மகானுபாவா
ஜீவகாருண்ய புருஷோத்மா, எங்களுயிரை யிரக்ஷிக்கும் பொருட்டு
கிணற்றிலிருந்து கரையேற்றி விடுவாயாகிலுனக்கேதாவது துன்
பம் நேரிடுங்காலத்தில் எங்களில் யாரையாவது நீ நினைப்பாயானலப்
போது வந்துனக்கு வேண்டுமுதவி செய்வோமென்று சொல்ல,
அதுகேட்ட ஒதுவாரும், மூன்றும் மனிதர்களுக்குபகாரஞ் செய்
யாதவைகளாக யிருந்தபோதிலும், நாமுயிர்தூரக்கக் கொண்டிருக்
கிற எண்ணத்தை நிறைவேற்றக்கூடியவைகளா யிருப்பதாலிவை
களைக் கரை யேற்றிவிடுவோமென்றெண்ணி, ஒவ்வொன்றாய் வெளி
யிற் தூக்கிவிடக் குரங்கும் பாம்பும் எங்களை நீ தனித்தனி நினைக்
குங்கால் வருவோமென்று சொல்லிவிட்டுப் போய்விட்டதுகள். கடு
வாய் நான் போய்த்திரும்பி யுன்னிடம் வருமளவும் சற்றுநேரமிவ்
விடத்திற்றானே யிருவென்று சொல்லிவிட்டோரோ பாச்சலிலோடிப்
போய்க் கொஞ்ச தூரத்திலிருக்கிற வனத்தில் வேட்டைக்காக வந்
திருக்கிற ஓர் இராஜகுமாரனையடித்துக் கொன்று அவனாபரணதி
களை யெல்லாமபகரித்து ஒருத்தருக்கும் அகப்படாமல் ஒதுவாரிடங்
கொண்டு வந்து கொடுத்து விட்டோடிப்போய்விட்டது. அதுகண்ட
இராஜ குமாரனுடன் வந்திருந்த படைகள் கடுவாயைத் தொடர்ந்து

ஓடிவரக் கடுவாயைக் காணாமல் ஓதுவாரையுமவரிடம் இராஜகுமாரனின் நகைகளையுங் கண்டு இவன் மாந்திரீகத் தொழிலினால் கடுவாயை யேவி இராஜகுமாரனையுங்கொன்று நகைகளையும்பகரித்து வைத்திருக்கிறானென்று தீர்மானித்து ஓதுவாரைப் பின்கட்டாகக் கட்டிப் பெரிய இராஜா சமுகத்திற்கொணர்ந்து விட்டு இக்கொடிய பாதகன். மந்திர வல்லமையினாற் கடுவாயை யேவி வேட்டைக்குப் போயிருந்த இளவரசனைக்கொன்று நகைகளையபகரித்து வைத்திருந்ததை நாங்கள்கண்டு நகையுடனிவனைப் பிடித்துக்கட்டிக்கொண்டு வந்து சமுகத்திலாஜர் செய்திருக்கிறோம். உத்திரவு சாதராக வேணுமென்று பிரார்த்திக்கப் பெரிய ராஜா வேட்டைக்குப்போன மகனிறந்துபோனதைப் பற்றி மகா வருத்தமடைந்து இக்கொடிய கொலைபாதகனைக் கொலையாளிகளைக்கொண்டு குலைசெய்து விடுகவென உத்தரவளித்தனருடனே குலையாளிகளோதுவாரைக் குலைக்களத்திற்குக் கொண்டுபோய்க் குலைசெய்ய யெத்தனிக்கையிற்சற்று பொறுங்கள் சிலபாதை செய்து வருகிறேனென்று சொல்லிவிட்டுப் போய்ச் சிலபாதைக்கிருக்கிற பாவனையாக உட்கார்ந்து கொண்டு துன்பம்வருங்கால் நினையென்று சொல்லிப்போன நாகத்தை நினைக்க நாகமுடனே வந்தென்ன நேரிட்டதெனக் கேள்க்கத் தனக்கு நேரிட்டிருக்கிற அபாயத்தை விபரமாய்ச் சொல்லவே நாகம் ஓதுவாரைப்பார்த்து இன்னங் கொஞ்சநேரம் தாமிதஞ் செய்துகொண்டிரு நானோர் கணத்திற்போய் இராஜாவின் அருமைப்புதல்வியைத் தீண்டிக்கொன்றுவிடுகிறேன். எந்த மாந்திரீகன் வந்தாலும் விஷமீறாது கூக்குரலிந்தக் குலைக்களத்திற்கெட்டிவிடும். நீ குலையாளிகளிட மெனக்கு விஷந்திருப்பத்தெரியு மென்னையவ்விடத்திற் கொண்டுபோய்விடுவீர்களாகில், நான் விஷத்தைத்திருப்பி இராஜகுமாரத்தி உயிருடன் பிழைத்திருக்கும்படி செய்வேனென்று சொல்லு அவ்டங்கொண்டுபோய் விட்டவுடனே யென்னை நினை நான் வந்து விஷத்தை வாங்கி உயிர் பிழைக்கும்படி செய்கிறேனென்று சொல்லிவிட்டு அதி தீவிரமாகவோடி இராஜபுத்திரியைக் கடித்துக் கொன்று ஓடிப்போய்விட்டது. உடனே புத்திரி விஷத்தாலிறந்த சமாசாரம் பெரிய இராஜா தெரிந்து எந்த மந்திரவாதியாவது அல்லது யாராவது யெனது புத்திரியின் விஷத்தை வாங்கி உயிர் பிழை

க்கச்செய்தார்களோ அவர்களுக்கு அவளை விவாகம் செய்து கொடுப்பதுடன் எனது இராஜ்யத்திற் பாதியுங்கொடுத்து விடுகிறேனென்று பறைசாற்றி விஷத்தைப் பார்க்கும்படி செய்ய வந்த மந்திரவாதிகளொருவராகிலும் ஷடி விஷத்தைத் திருப்ப முடியாமல் இராஜா முதலிய பட்டினத்துச் ஜனங்கள் பூராவும் பில த்தகூக்குரல் சத்தமிட்டனர்கள். அக்கூக்குரல் சத்தமானது குலை க்களம் வந்தெட்டியது. உடனே ஓதுவார் கொலையாளிகளைப்பார் த்து இராஜபுத்திரி விஷத்தாலிறந்து போயிருக்கிறதாகச் சப்தம் உண்டாகிறது. என்க்கு விஷந்திருப்பத் தெரியுமென்னையவ்விடங் கொண்டுபோய் விடுவீர்களாகில் விஷத்தை மீட்டி இராஜ புத்திரி யைச் சுகப்படுத்திய பின் என்னைக்கொண்டு வந்து கொலை செய்து விடுங்கள் நான் அவ்வோசையைக் காதிற் கேட்டுச் சகிக்கமாட்டா மற் சொல்லுகிறேனெனக் கொலையாளிகளப்படியே செய்கிறதென் றோதுவனை, இராஜ சமுகத்திற் கொணர்ந்து விட்டு இவனுக்கு விஷ ந்திருப்புகிற வல்லபமிருக்கிறதாகச் சொல்லியதினலிவனை யுத்தர வுப்படி கொலை செய்யாமற் கொண்டு வந்திருக்கிறோம். விஷந்தி ருப்பி உயிர் பிழைத்தபின் இவனை ஆக்கினைப்படி நிறைவேற்றிவிடு கிறோமென்று தெரியப்படுத்தவே நல்லது அப்படியே செய்யட்டும் பார்ப்போமென்று இறந்து கிடக்கிற மகளிடம் ஓதுவாரையனுப்பித் தானும் மற்ற ஜனங்களுடன் கூடவேபோக ஓதுவார் ஜனங்களை விலகும்படி செய்வித்து இறந்து கிடக்கிற இராஜபுத்திரியிடஞ் செ ன்றவளைச் சுற்றிலுந் திரைகட்டும்படி செய்து இராஜா முதலிய யெல்லோரிடத்திலும், இங்ஙனமிவ்வழியாய் ஓர் சர்ப்பம் வரும். அதை யொருவருந் தீண்டாதிருக்க வேணுமென்று விடைபெற்றுக் கொண்டு ஒரு சேவலும், ஓர் கிண்ணத்திற் பாலும் வாங்கிக்கொ ண்டு திரைக்குட்புகுட்டுட்கார்ந்து கொண்டு நாகத்தை நினைக்க அச்சணமே நாகம் விரைவாக ஓடிவந்து இராஜ புத்திரியின் தேகத்திற் சென்று சிரசு முட்டிக்கொண்டிருக்குந் தனது விஷத்தைத் திரும்பக் கடித்து வாங்கிச் சேவலிலும், பாலிலுங் கக்கிவிட்டுப் போய்விட்டது. இராஜ புத்திரி தூங்கிவிழித்தவள்போல் எழுந்து நின்றனள். இராஜா வெகு சந்தோஷமுமாச்சரியமுமடைந்து தன் மகளை முன் ஆக்ஞாபித்த உத்தரவுப்படி ஷடி ஓதுவாருக்கு விவா

கஞ் செய்விக்கக்கருதி இராஜ முறைப்படி அன்பத்தாறு தேச அர சர்களையும் வருத்தி பட்டின முதலிய சகலமுமலங்கரித்துச் சகல மேளவாத்திய கோஷ்டத்துடன் விவாஹஞ் செய்து கொடுத்துத் தனது தேசத்திற் பாதியுங் கொடுத்ததற்குப் பட்டமுங் கட்டுவிய்த்து அரசாளும்படி செய்துவைத்தனர். அப்படி இராஜரீகம் செய்துகொண்டிருக்குங் காலத்தில் ஓர் நாள் குரங்கின் ஞாபகம் வந்து தனித்திருக்கும்போது நினைக்க உடனே குரங்கு வந்து ஓர் மாங்கனியைக் கொடுத்துவிட்டுப் போயிற்று. அம்மாங்கனியானது இவ்வுலகத்திலகப்படக்கூடாததாகவும், அதிகப் பரிமளவாசனையுடையதாகவுமிருந்தபடியாலதைத் தனது மனைவி கையிற்கொடுத்து இதைப் பத்திரமாய்ப் பெட்டியில் வைத்து பூட்டிவை. காலையில் நாமிருவரும் ஸ்நானம் செய்து அதன்பின் இதைப் புசிக்கவேண்டுமென்று சொல்லிக்கொடுக்க வாங்கிப் பெட்டியில் வைத்துப்பத்திரமாய்ப் பூட்டிவைத்தனள். அன்று மகளை ஒரு வாரமல்லது நாலு நாளைக்கொருதபா வந்து பார்த்துப்போகிற பெரிய இராஜாத்தி மகளிடம் வந்து பேசிக்கொண்டிருக்கையில் மாங்கனியின் வாசனையை யறிந்து இஃதென்ன பரிமளவாசம் யென்றுமரியாததாயிருக்கிறதெனக் கேட்க மகள் தாயே உனது மருமகன் கொணர்ந்து வைத்திருக்கும்படி கொடுத்த ஓர் மாங்கனியின் வாசனையென, அதைக் கேட்ட இராஜாத்தி அக்கனியை யான் பார்க்கவேண்டுங் கொண்டு வாவென மகளுக்குச் சொல்ல மகள் அக் கனியின் பெருமையின்னதென்றறியாதவளானதினால் தாயுத்திரவைத் தள்ளாமற் கனியைக் கொண்டு வந்து பார்க்கும்படி தாயிடங் கொடுக்க அதை வாங்கி வாசனையுமழகையும் பார்த்து ஆசையுற்றுப் புசித்து விட்டனள். உடனே விர்த்தாப்பியம் நீங்கி பதினாறு வயசுடைய யௌவன ஸ்திரியாகி நாணமுற்று மருமகன் பார்க்குமுன்றனது அரண்மனைக்குப்போய்விட வேணுமென்று போயினள். பெரிய ராஜா இவள் வருவதைப்பார்த்துத் தனது மனைவியென்றறியாமல் தெய்வலோகத்துப் பெண்களிலொன்றோ, அல்லது யீஸ்பரியோ, இலக்ஷ்மியோ, யென்று பயந்து சிம்மாசனம் விட்டிரங்கி உபசாரஞ் செய்வதற்கோடிவந்தனர். உடனே கையமர்த்தி யான் உமது மனைவியாகிய அடியாளெனத் தெரிவிக்க இவ்வாறாகிய காரணம் யாது இயம்புதியென

நமது மகள் கொடுக்க வாங்கியான் புசித்த மாங்கனியால் வந்த மார்க்கமெனச் சொல்ல இராஜனாச்சரியமடைந்து நீ மாத்திரமிப்படியிருக்க யான் வயோதிகமாயிருக்கில் யாதுனக்குப் பிரயோஜனம் இன்னொரு கனி யெனக்கு வாங்கிக்கொண்டு வாவென உத்தரவளித்தனுப்ப அவ்வுத்தரவின் பிரகாரம் மறுபடியும் மகளிடம் வந்து நடந்த செய்தியைச் சொல்லி இன்னொரு கனி தருவித்துக்கொடுக்கும்படி சொல்லெனச் சொல்ல அது கேட்ட மகள் தன் நாயகரிடம் இவ்விர்த்தாந்தங்கள் யாவற்றுமறிவித்து இன்னொருகனி கொடுக்கவேண்டுமெனப் பிரார்த்தித்து நின்றனள். அவள் நாயகனாகிய புதுராஜா மறுபடி ஓர் மாங்கனியைக் கருதி குரங்கை நினைக்க உடனே வந்து யாது காரணம் இயம்புதியென, புதுஅரசன் முன் நடந்த விபரத்தைத் தெரிவித்து தன் மாமனாரின் பொருட்டு இன்னொரு மாங்கனி வேண்டுமென அறிவிக்க அது யெனது கனியன்று, எனது நண்பன் தெய்வேந்திரனாற்பெற்றனன். அஃதுனக்கு முன்கொணர்ந்து கொடுத்தேன். இப்பொழுது யானென்ன செய்வேனென்று சொல்ல, அங்கேபோயாவது தருவித்துக்கொடுக்க வேணுமென்று சொல்ல அது கேட்ட குரங்கு யான்மாத்திரம்போயின்னொரு கனி வேண்டுமென்று கேட்பது சரியன்று, தெய்வலோகத்துக்குப்போய் வருகிற விஞ்சையானறிந்திருக்கிறேன் அதையுனக்குபதேசிப்பேன் நீயுமென்னோடு வாவென மத்திரத்தையுபதேசித்துக் கூடவே அழைத்துக் கொண்டுபோய்த் தெய்வேந்திர மகாராஜனிடம் போய்த் தெரிவித்து எனது நண்பனாகிய இவனுக்கு இன்னொரு மாங்கனி உத்தரவாகவேணுமென்று கேட்ட குரங்கைப் பார்த்து அக்கனி யென்னுடைய தன்று, யெனது குருவாகிய வியாழபகவானிடம் பேசிக்கொண்டிருக்கும்போது அவர் யென்மீதிருந்த சந்தோஷத்தினால் அஃதெனக்குக் கொடுத்தனர். அதை நீ யெனக்கு முக்கிய சிநேகிதனானதினாலுனக்குக் கொடுத்தேனெனக் கேட்ட வானரம் யெனது நண்பனாகிய தெய்வேந்திரமகாராஜனே! வியாழபகவானிடம் போய் ஒரு கனி வாங்கிக்கொடுக்கவேண்டுமாகையால் கூடவே வரவேணுமென்று அழைத்துக் கொண்டு போய் வியாழபகவானைக்கண்டு தரிசித்துத் தெரிவிக்க அந்தக்கனி யென்னுடையதன்று, சரஸ்பதியிடம் ஒருநாள் பேசிக்கொண்டிருக்கும்

போதுமென்பேரிற் சந்தோஷமடைந்து அதைக்கொடுத்தனள், அம்
னுக்குக் கொடுத்தேனெனச் சொல்லக்கேட்டு அப்படியானால் தா
ங்களும் கூடவே வந்து சரஸ்பதியிடம் வாங்கிக் கொடுக்கவேணு
மென்று சொல்லி அழைத்துக்கொண்டு வந்து கேள்க்கச் சரஸ்பதி
அது என்னுடைய தன்று, பிரமாவும் நானும் ஏகாந்தமாயிருந்து,
பேசிக்கொண்டிருக்குங் காலையில் அவர் கொடுத்த கனியெனச் சொ
ல்ல அவளையழைத்துக்கொண்டுபோய் பிரமாவிடம் கேட்க அது
என்னுடையகனியன்று, யென்னுடைய பிதாவாகிய மகாவிஷ்ணு
வால் யெனக்குக் கிடைத்ததைச் சரஸ்பதிக்குக் கொடுத்தேனெனச்
சொல்லத்தேவரீர்கூடவந்து வாங்கிக்கொடுக்கவேணுமென்று அழை
த்துக்கொண்டுபோய் மகாவிஷ்ணுவிடம் கேட்க அது என்னுடைய
தன்று, யெனது நாயகியாகிய மகாலெக்ஷிமி கொடுத்ததை பிரமா
வுக்குக்கொடுத்தேனென்று சொல்லத் தேவரீர் கூடவே வந்து
வாங்கிக்கொடுக்கவேணுமென்று சொலவி அழைத்துக்கொண்டு
போய் மகாலெக்ஷிமியிடம் கேட்க, அது யெனது கனியன்று, யான்
யீஸ்பரியிடம் பேசிக்கொண்டிருக்குங் காலத்தில் நான் சொல்லிய
வசனங்களால் சந்தோஷமடைந்து, அக்கனியை யெனக்குக்கொடுத்
தனளதை யெனது நாயகருக்குக் கொடுத்தேனென்று சொல்ல தா
யே கூடவே வந்து வாங்கிக்கொடுக்கவேணுமென்று அழைத்துக்
கொண்டுபோய் யீஸ்பரியிடங் கேட்க, அது யென்னுடையதன்று,
மகா மாக்ஷிமை பொருந்திய பரமசிவத்தாற் கொடுத்ததை லக்ஷிமி
க்குக் கொடுத்தேனென்று சொல்ல, தாயே கூடவேவந்து வாங்கிக்
கொடுக்கவேணுமென்று சொல்லியழைத்துக்கொண்டுபோய் யீஸ்பர
னிடந் தெரிவிக்க அது யென்னுடைய கனியன்று, இக்கைலைக்கு
மேலான ஓரிடத்தில் ஓரம்மாள் சிம்மாசனத்தில் வீற்றிருக்கின்ற
னள். அவளிடத்திலித்தானிப்பேர்ப்பட்ட மாங்கனிகளும், பின்னு
மனேகவிதமான கனிகளுமிருக்கிறது. அவளிடம் நான் பேசிக்
கொண்டிருக்கும்போது யென்பேரிலன்புற்று மகா சந்தோஷத்து
டன் அக்கனியைக் கொடுத்தனள். அதை யெனது பிரியநாயகியா
கிய உமையவளுக்குக் கொடுத்தனன் யென்று சொல்லத் தேவரீர்
அடியேங்கள் பேரில் பரிபூரண கிருபை பாலித்துக் கூடவே வந்து
வாங்கிக்கொடுக்க உத்திரவாக வேணுமென்று தெருவித்து எல்லா

ரும் **அதாவது, வசனரம்,** ஓதுவார், தெய்வேந்திரன், வியாழபகவான், சரஸ்பதி, பிரமா, மகாவிஷ்ணு, மகாலக்ஷ்மி, பரமேஸ்பரி, சிவபெருமான் எல்லாருமொன்று சேர்ந்துபோய் சிம்மாசனத்தில் வீற்றிருக்கின்ற அம்மாளையும், பக்கத்திலிருக்கிற அவள் குழந்தைகளையும், அடிமைகளையும், பசுவையுங் கண்டு அந்த அம்மாளிடந் தெரிவிக்க, தன்னுடைய நாயகனாகிய ஓதுவாரைக் கண்ட மாத்திரத்தில் குபீரென்று சிம்மாசனம் விட்டிறங்கி கணவன் காலில் விழுந்து நமஸ்கரித்து கைகட்டி வாய்புதைத்து நின்றனள். அதைப்பார்த்த யீஸ்பரி மகாகோபமுடையவளாய்ச்சுவாமியை நோக்கி அண்டபுவன சராசரங்களுக்கெல்லாம் மேலாகயிருக்கின்ற தேவரீரைக்கண்டு சிம்மாசனம் விட்டிறங்காமலிருந்தவள் ஒரு நரமனுஷனைக்கண்டு சிம்மாசனம் விட்டிறங்கி நமஸ்கரித்து கைகட்டி வாய்புதைத்து நிற்கின்றனள். இதுவென்ன அதிசயமெனக்கேட்ட யீஸ்பரியைப்பார்த்து நமக்கு முன்னொருநாள் பால்கொடுத்துப் பசியாற்றிய யெனது தாயிவள், நம்மிலும் மேலான ஸ்தானத்திலிருக்கின்றனள். அவளுடைய பத்தாவான ஓதுவார் இவர் யெனது பிதா, இந்த ஸ்தானத்துக்கு வந்து புமானும் ஸ்திரியும் குழந்தைகள் முதலிய யாவர்களும், நம்து தெரிசனையை யெப்போதுமடைந்து இவ்விடத்திலேயே சிம்மாசனத்தில் வீற்றிருப்பார்களெனக் காண்பித்து ஓதுவாரை அவர் மனைவியுடன் சிம்மாசனத்திருக்கும்படி உத்தரவுசெய்துவிட்டு தேவர்களுடன் திரும்பி வருகையில், தம் திருமேனியைத் தீண்டியடித்துத்துரத்திவிட்ட அதிபாதகனாகிய பிரபு ரௌரவ நரகத்திற் கிடந்து அதிலுள்ள கஷ்ட நிஷ்டூரங்களிலும், பசிதாகத்தாலும் வருந்துகிறதையும் காண்பித்து யீஸ்பரி திருப்தியடையும்படி செய்து

கவி.

முற்றுடர்பிற்செய்த முறமையால் வந்த செல்வம்
இற்றை நாள் பெற்றோமென்றெண்ணாது பாழ்மனமே
அற்றவர்க்கு மீயாமல், அரன்பூசையோராமல
கற்றவர்க்கு மீயாமல் கடுநரகில் வீழ்ந்தனையே.

என்று சொல்லிவிட்டு தேவர்கள் முதலியவர்களை அவரவர்களிருப்பிடமனுப்பிவிட்டுக் கைலையில் யீஸ்பரியுடன் களிப்புற்று வீற்றிருந்தனர். இதை வாசித்தும் கேட்டும் அறிகின்ற புண்ணியவான்களே! புண்ணிய ஸ்திரிகளே! பசியால் வருந்திவருகிற அதிதிபரதேசி, பெரியவாள் முதலான பேர்களுக்கு அன்னதானமுதலானது கொடுத்து ஆதரிப்பதினுல வரும் பலனை நன்காராய்ந்து அப்படியே மனமகிழ்ச்சியுடனும், அன்புடனுஞ் செய்து பேரின்பவீட்டையடையக்கடவீர்களாக.

இராஜகுமாரர்கள் மூவர்களின், கதை.

திருமங்கை நகரமென்றோர் பட்டணத்தில், ஓரிராஜனிருந்தானவனுக்கு மூன்று குமாரர்களிருந்தார்கள். ஷெ இராஜா தான் ராச்சியபரிபாலன விசாரணையில் நாடோறுஞ் சிம்மாசனத்திலிருந்து நடத்திக்கொண்டு தனது மூத்த குமாரனை விபசாயவேலை பார்க்கின்ற தன் பண்ணையாட்களுடன் நன்செய் புன்செய்களுக்குப் போய் உழவு முதலியது நடத்தியும், மற்ற வேலையாட்களைச் சரியாய் நடததிவருப்படி மேற்பார்த்து வரும்படி நாடோறுமனுப்புகிறதும், மற்ற இளைய குமாரரிருவர்களையும் வேறு காலியான இரண்டு விடுகட்டிக்கொடுத்து ஆளுக்கொருவீட்டில் அவனவன் மனைவியோடிருந்து சகல இன்பசுகங்களையனுபவித்துக் கொண்டு சீட்டு சொக்கட்டான், சதுரங்க முதலிய விநோத விளையாட்டுகள் விளையாடிக்கொண்டிருந்து போஜனஞ்செய்யுங்காலங்களிற் தங்கள் தமயனுர் மனைவியாகிய மகாபுண்ணியவதி, அறுசுவையுடன் சமையல் செய்து ஸ்நானம் செய்வதற்கு வென்னீரும் சித்தப்படுத்தியிருப்பதால் உடனே தங்கள் மனைவிகள் சகிதமவடம்போய் ஸ்நானஞ்செய்து போஜனஞ் செய்து விட்டு மறுபடியும் தங்கள் தங்கள் வீட்டி

ற்கு வந்து உல்லாசமாயிருக்கும்படி உத்தரவு செய்துவைத்திருந்தார். அந்தப்பிரகாரமே நாடோறும் நடந்து வருகிறது. அப்படி நடந்துவருங்காலத்தில் இராஜாவுக்கு வயோதிகபருவம் வந்துவிட்டதினால் இராஜ காரியம் பார்க்கச் சாத்தியப்படாதென்று நினைத்துத் தன் மூத்தகுமாரனை யழைத்து எனக்கு வயோதிகபருவம் வந்துவிட்டதினால் எனது இராஜாங்கவிசாரணையை நீ யின்றுமுதல் ஒப்புக்கொண்டு நீ யிதுவரை பார்த்துவந்த உழவு முதலிய வேலைகளையுனது சகோதரர்களிருவர்களையும் பார்த்துவரும்படி செய்யென்று உத்தரவு கொடுத்து ஷடி மூத்த குமாரனுக்குப் பட்டாபிஷேகம் செய்வித்துத் தானும் தனது பட்டஸ்திரியும் யாதொருவேலையுமின்றிச் சுகமேயிருந்தார்கள். பெரிய இராஜா உத்தரவுப்படி இராஜவிசாரணைகளைத் தான் நடத்திக்கொண்டு தனது தம்பிமார்களைப் பண்ணையாட்களுடன் உழவு முதலிய வேலைகளை நடத்திவரும்படி திட்டஞ்செய்து வந்தான். அந்தப்படி நடந்துவருங்காலத்தில், ஓர் நாள் தம்பிமார்கள் மனைவிகளிருவர்களும் ஆலோசிக்கத் தொடங்கினார்கள். அஃதாவது அடியே! அக்கா பார்த்தயா, நமது பிழைப்பு நன்றாயிருக்கிறது, என்னவெனில் நமது கணவர்களிருவரும் பள்ளப்பயலினுங் கேடுகெட்டவர்கள் போல பகலெல்லாம் வேனற்கொதிக்கும் வெயிலிலும், மழையிலும், பண்ணைப்பள்ளர்களோடு போய் உழுது கஷ்டப்பட்டுக்கொண்டு வருகிறது. அத்தானவர்கள் மாத்திரம் சிம்மாசனத்திலிருந்து இராஜரீகஞ்செய்துகொண்டிருக்கிறது. அவர்களுடன் இவர்களும் பிறக்கவில்லையா, இப்படி உழுது பிழைப்பதைப் பார்க்கிலும், எங்கேயாவது போய்ப் பிழைப்பது நல்லதல்லவா, நமது பெரியஅக்காள் ராஜா பெண்சாதி அவள் மாத்திரம் பெரிய அரண்மனையிலிருந்துகொண்டு அவளே சமையல் முதலானது செய்து நமக்குச் சாப்பாடு போடுவதினால் அவள் கைபார்த்துத்தானே நாம் பிழைக்கவேண்டியதாயிருக்கிறது. இது என்னடி நாமும் அந்த அரண்மனைக்கு வந்தவர்களல்லவா. எப்படியிருக்கிறது காரியம். இன்றைக்கு நமது மாப்பிள்ளைமார்கள் வந்தவுடன் நாம் சயனித்திருக்குங்காலத்தில நன்றாய்ப்போதிப்பிக்கவேண்டும் அப்போதுதான் அறிவுவரும். பாகம்பிரிப்பார்கள் பாகம் பிரித்துவிட்டால் நம்மிஷ்டப்படி சகலமுமனுபவிக்கலா

மென்றிவ்வாறாக ஆலோசனை செய்துவைத்துக்கொண்டு அவரவர்கள் கணவன் வரவை யெதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். அப்போது கணவர்களிருவரும் காட்டிலிருந்து உழவு முதலிய பருவங்களை நடத்திவிட்டு மத்தியானப் போஜனத்திற்காக வீட்டுக்கு வந்தார்கள். வந்தவர்கள் தாகவிடாய் தீர்த்துக்கொள்வதற்கு முன்னதாகவே அவரவர்கள் கணவனிடம் வந்து நின்று இதுதான் வருஷமெல்லாம் உங்களுக்குப்பிழைப்பு, பள்ளனிலுங் கேடுகெட்ட பள்ளனைப்போல் உழுதுகொண்டுதிரிகிறது. உடன் பங்காளி மூத்தவர்கள் யெவ்விதமாயிருக்கிறார்கள். உங்களுக்கேன் அறிவில்லை, ஒன்றுயிருந்தால்தானே யிந்தக்கொடிய வெயிலிலும், மழையிலும், பனியிலும், உழப்போகச் சொல்வார்கள். நம்முடைய பாட்டுக்கு வேறேயிருந்துகொண்டாலிஷ்டப்படியிருக்கலாமல்லவா, இவ்வளவு தெரியாதா, ஆண்பிள்ளைகளுக்கு ஒரு பெண்பிள்ளைக்குண்டான விவேகமுமில்லையா, இந்தப்பிழைப்புப் பிழைப்பதைப்பார்க்கிலும், தேசாந்தரம்போய்விட்டால்த் தானென்ன வென்று இவ்விதம் சொன்னவுடன் யேற்சொன்னயிருவர்களுக்கும், காதில் நாராசங்காய்ச்சிவார்த்ததுபோலாகிச் சாப்பாட்டையுமறந்து அவரவர்கள் திமிர்வாதமுற்றவர்கள்போல் மறுபேச்சின்றி ஒருத்தரையொருத்தர் பார்த்துக்கொண்டு பேசாதிருந்தார்கள். அப்போது தமையனார் பத்தினியாகிய மகாபுண்ணியவதியானவள் கொழுந்தன்மார்கள் வளக்கப்படி போஜனத்திற்கு வரவில்லையே, நாளிகையுமதிகமாய்விட்டதே, யேதுகாரணம்பற்றி வரவில்லையோ, உடம்பிற்குச் சுகமில்லையோ அறிந்துவருவோமென, வெகு ஜாக்கிறதையாகக் கொழுந்தன்மார்கள் இருக்கிறயிடத்திற்கு வந்து அவர்கள் மதினியார் வரவைப் பாராதிருக்கின்றவர்களை நோக்கி நீங்கள் வழக்கப்படி போஜனத்திற்கு வாராமலும், ஒன்றும் பேசாதிருக்குங் காரணம் யாது, சரீரத்துக்குச்சுகமில்லையா, தலைநோகின்றதா, அல்லது வேறென்ன கவலையேற்பட்டது யேன் பேசாது சும்மாயிருக்கின்றீர்கள் யெதார்த்தத்தைச் சொல்லுங்களென்று கேட்கவே, மகாகோபிஷ்டர்களாகிபோடிபோ! உன்னை யார்கேட்டார்கள். எங்கள் பாட்டுக்கு நாங்களிருக்கின்றோம், உன்சோறும் வேண்டாம் ஒன்றும் வேண்டாம் வந்தவழியைப்பார்த்துப் போய்விடுயென்றார்கள். அந்த மகாபுண்ணியவதி

திகிலடைந்து இது யேதோ விபரீதமாயிருக்கின்றது என்று, அரண்மனைக்கு வந்து; தன்நாயகனாகிய ராஜாவுக்குத்தெரியும்படி யேவலாளிவசம் சொல்லியனுப்பினள். ஷெ சமாசாரங்கேட்ட இராஜா சிம்மாசனம்விட்டிரங்கி அரண்மனைக்கு வந்து தன் நாயகியிடம் யென்ன காரணமென்று கேட்கவே, நாயகி கொழுந்தன்மார்கள் தன்னை அவதூறாகச் சொல்லிய வார்த்தைகளை ஒன்றுஞ் சொல்லாமல் யேதோ உடம்புக்குச் சுகமில்லைபோலத் தோன்றுகிறது. வள்க்கப்படி சாப்பிடவரவில்லை யென்றனள். அதுகேட்ட இராஜா, தம்பிமார்களிருக்கிற யிடத்துக்கு வந்து யேன் போஜனத்துக்கு வரவில்லை, தலைநோகின்றதா, சுரமடிக்கின்றதா, அல்லது வேறென்ன சொல்லுங்களென்றார், அப்போது கொடூர பார்வையாய்த் தமையனாரை நோக்கிப் போங்காணும் பைத்தியங்கொண்டவரே, நீர் மாத்திரம் சிம்மாசனத்திலிருந்து ராஜரீகம் பண்ண நாங்கள் பள்ப்பரையிலும் கேவலமாய் வருஷமெல்லாம் உழுதுகொண்டு திரிவோமா, அப்படியெங்களுக்குச் சம்மதமில்லை. எங்கள் பாகத்தை யெங்களுக்கு ஒதுக்கிவிடும். அப்போதுதான் நாங்கள் போஜனம் பண்ணுவோம் என்றார்கள். நல்லது அப்படியே செய்கிறேன் விசனப்படாதீர்களென்று சொல்லிவிட்டு, அரண்மனையில் வந்து உட்கார்ந்துகொண்டு உடனே கஸ்பாக் கணக்கப்பிள்ளையைக், கூட்டிவரும்படி சேவகனுக்கு ஆக்ஞாபித்தார். சேவகன் கணக்கப்பிள்ளையைக் கொண்டு வந்து விடவே, ஓய் கணக்கப்பிள்ளை; நம்முடைய ஜங்கம ஸ்தாபர ஆடையாபரண முதலாகிய சகல சொத்துக்களையும், இரண்டுபாகம் செய்து அந்தப்படிக்குக் கணக்குத் தயார் செய்து மற்றொரு மூன்றாவது பாகத்திற்கு மாதா, பிதா, இரண்டுபேர்களையுமேற்படுத்தி அந்தக் கணக்கில் தாக்கல் செய்து, ஆக மூன்று கணக்கையும் இன்று நாலுமணிக்குள் கொண்டுவந்து கொடுக்கவேணுமென்று உத்தரவு செய்தார். கணக்கப்பிள்ளை மகாராஜாவே, நம்முடைய சொத்துக்கள் பூராவையும், இரண்டுபாகம் செய்து கணக்கு முடிக்க வேணுமானால் மாசம் ஒன்று செல்லுமே, இன்று நாலுமணிக்குள் எப்படி முடியும். நாலு நாளைக்காவது உத்தரவு கொடுத்தால் தயார்செய்துகொண்டுவருகிறேனென்றனன். அது கூடாது, எப்படியாவதுகூட ஆள்க்களை சகாயத்துக்கு வைத்துக்கொண்டாவது, நாளைக்காலை ஆறு

மணிக்குள் ஷடி கணக்கு தயார் செய்துகொண்டு வந்து கொடுக்க வேணுமென்று கண்டிப்பாயுத்தரவு செய்தனுப்பினர். உத்தரவுப் பிரகாரம் வெகு விரைவாய்க் கணக்குத் தயார்செய்துகொண்டு வந்து கொடுத்ததை வாங்கிக்கொண்டு தம்பிமார்களிருக்கிற யிடத்துக்குப் போய் அவர்களிடம் மூன்று கணக்கையும் கொடுத்து, இரண்டுபாகத்துக்குச் சொத்துக்களும், ஒரு பாகத்துக்கு மாதா பிதாவையும், பாகஞ்செய்திருக்கிறது. எது சம்மதமோ, அதை யெடுத்துக்கொள்ளுங்களென்றார். உடனே தம்பிமார்களும், அவர்கள் மனைவிகளும் பார்த்து இந்தக்கிழட்டு முடிவார்கள் எங்களுக்கு வேண்டாம் அவர்கள் சொத்துக்களுக்கீடாவார்களா; இது என்ன பைத்தியம் அந்த யிரண்டு கிழடுகளையும் நீரே கட்டியழும். நாங்கள் இந்தக் கணக்கை ஆளுக்கொன்று எடுத்துக்கொள்கிறோமென்று சொத்துக்கள் பாகித்து எழுதியிருக்கிற கணக்கிரண்டையு மெடுத்துக்கொண்டார்கள். மாதா, பிதாவைப்பங்காக யேற்படுத்திய கணக்கை மகா சந்தோஷத்தோடு தான் யெடுத்துக்கொண்டு தம்பிமார்கள் வசம் அரண்மனை முதலிய சகல சொத்துக்களையும், ஆடையாபரணங்களையும், ஒப்புவித்துவிட்டுத் தன் மனைவியையழைத்து நம்முடைய பங்குக்கு எனது மாதா, பிதா யிருவர்களுமாகையால், நீயுனது மாமியாரை யிடுப்பிலெடுத்துக்கொள், நான் உனது மாமனாராகிய எனது பிதாவை நானெடுத்துக்கொள்கிறேன். இவ்வூரைவிட்டுப் பிரயாணமாய் எங்கேயாவது போய்ப் பிழைப்போமென்று, அவ்விதம் ஆளுக்கொருவரை யெடுத்துக்கொண்டு சுயதேசத்தை விட்டு மறுதேசம் போகச்சென்றனர்கள். போகிறவழியில் சூரிய உஷ்ணத்தாலும், பசிதாகத்தாலும், இராஜ சரீரமானதால் அதிக வருத்தமடைந்ததுமன்றி, மாதா. பிதாவின்வருத்தத்தைச்சகியாதவர்களாய் ஆ! தெய்வமே, இந்தஆரண்யமானகாட்டில்நாங்களிவ்விதவருத்தமடையலாமா, நாங்கள் தான் எங்கள் பூர்வசென்மாந்திர விதிப்படி வருத்தமடைந்தாலும், எனது மாதா, பிதா யிருவர்களும், வயோதிகமான காலத்தில் எவ்வளவோ சுகத்தையனுபவிக்க வேண்டியதை விட்டு, பாவிகளாகிய எங்களோடு, வெயிலிலும், காற்றிலும், பசிதாகத்திலும், இவ்வளவு வருத்தமடையலாமா, என்றிவ்வாறு பிரலாபித்து யீசனை நினைத்துத் தியானஞ் செய்து கொண்டு மூன்றுநாளன்னாகாரமில்லா

மல், பெரியோர்களை யெடுத்துச் சுமந்துகொண்டு, வழிநடந்து ஓர் பட்டினத்தையடைந்து ஒரு காலி மடத்தில் மாதா, பிதா, மனைவி, மூவர்களையுமிருக்கும்படி செய்துவிட்டு, அவ்வூரிலிருக்கின்ற சிவாலயத்திற்குட் பிரவேசித்துச் சுவாமியைத் தெரிசனஞ்செய்து சுவாமீ யெங்களுக்கு யாதொருகதியும் உம்மையன்றி வேறில்லையே, நாங்கள் மூன்றுநாளாயிற்று ஆகாரத்தைக்கண்ணுற்றுப்பார்த்து, அதிக விருத்தாப்பியமாயிருக்கிற, எனது மாதா, பிதாவுக்கு ஆகாரம் எங்கிருந்து கொடுப்பேன். இந்தவூரில் யாவரையுமறியாதவனாகயிருக்கின்றேன். அன்னப்பிக்ஷையேற்றுவரவேணுமென்றாலும், கட்டியிருக்கிற ஓர் வஸ்திரத்திற்கு வேறில்லை. ஒரு மண் பாத்திரங் கூடக்கையிலில்லை. இதற்கென் செய்வேன் தெய்வமே! யென்று சுவாமியிடமறிக்கையிட்டுவெளியில் வரும்போது கோடகாவாசலில ஒரு செல்லாத கால்த்துட்டு கீழே கிடக்கக்கண்டு அதை யெடுத்துப் பார்த்து இது செல்லாததுட்டாயிருக்கிறதே, இதற்கு யாரும் ஒன்றும் கொடுக்கமாட்டார்களே, கருப்புக்கட்டி வாங்கித் தாகந்தீர்ப்பதற்குக்கூட பிரையோஜனமில்லையே யென்று, யோசித்துக்கொண்டு வெளியில் வீதிவழிவரும்போது, மீன் விற்கிறவனைக்கண்டு இவன் பொருட்செலவின்றி கடல்முதலியநதிகளில்ப் பிடித்துக்கொண்டுவந்துவிற்கிறவன்தானே யென்று நினைத்து அவனிடம் போய் இது செல்லாத காசு, இதை நீ வைத்துக்கொண்டு உனக்குவில்லாத கழிவு மீன் ஒன்று எனக்குக்கொடு, அதை என்னைப்போல் ஒரு ஏழைக்குக்கொடுத்து ஒரு கால்த்துட்டு வாங்கிக்கருப்புக்கட்டி வாங்கித் தாகந் தீர்க்கவேண்டியதிருக்கிறது என்றனன், மீன் விற்கிறவன் இவருடைய களைப்பையும், வருத்தப்படுவதையும் பார்த்து அச் செல்லாத துட்டை வாங்கிக்கொண்டு ஒரு கழிவாகிய உலர்ந்தமீனைக் கொடுத்தனன். அதை வாங்கியிரண்டு கூறாக்கிக்கொடுத்தால் இரண்டுகால்த்துட்டு கிடைக்குமென்று நினைத்து, அதை,யிரண்டாக அறுத்தபொழுது, அதற்குள் ஓர் முத்து யிருந்தது, இதுவுந் தெய்வச்செயல் தானென்று நினைத்து இதை இவ்வூரிலிருக்கின்ற ரத்தினவியாபாரி மங்குசெட்டியாரிடங் கொடுத்து இரண்டுபடி அரிசி வாங்கி சமையல்செய்து மாதா, பிதா முதலானபேர்களும் சாப்பிடுவோமென்று மங்குசெட்டியாரிடம்போய், ஐயா, இந்தமுத்தைவைத்துக்கொண்டு

ரெம்ப யேழையாயும், களைப்போடுமிருக்கிற எனக்கு இரண்டுபடி அரிசி கொடுக்கவேணுமென்றார். உடனே மங்குசெட்டியார் ஷெ முத்தை வாங்கிப்பார்த்துஇது சுண்டுமுத்தாகயிருக்கின்றது இந்த கிரையத்தை நீர் இருக்குமிடம் கொண்டுவந்து சேர்க்கிறேன். இப் போ அதிகக்களைப்போடும், பசியோடுமிருப்பதால் நான்கொடுக்கிற நாலுபடி அரிசியும், அதற்குறிய சகல சாமான்களையும் வாங்கிக் கொண்டுபோய்ச் சமையல் செய்து சாப்பிடுங்களென்று அனுப்பி னார் அவைகளைவாங்கிக்கொண்டு வந்து மனைவியிடங்கொடுத்துச்சீக் கிரம் சமையல்செய்து எனது மாதா, பிதாவுக்குக்கொடு அதன்பின் நாம் சாப்பிடலாமென்று கொடுத்துவிட்டு, அன்னக்களைப்பு அதிக ரித்ததினிமித்தம் மறுபடியும், ஷெ கோவில் குடகாவாசலில் வந்து தரையில் சுவாசம அடங்கிப்படுத்திருந்தார். அச்சமையமதற்கடு த்த ஓர் பட்டினத்தின் இராஜா வாரிசின்றி யிறந்துபோனதினால், பட்டத்திற்கு வேருளமைப்பதற்காகப் பட்டத்துயானையின் கையில் கும்பஜலமும், புஷ்ப ஆரமுங்கொடுத்து யானையபிஷேகஞ்செய்து ஆரமும் போட்டுத் தன்மத்தகத்தில் தூக்கிவைத்துக்கொண்டு வந் துசிம்மாசனத்தில் வைக்கின்றதோ, அவர்களுக்குப் பட்டங்கட்டு கிறதென்று தீர்மானித்து மேற்கண்டபிரகாரம் யானையை விட்டு மந் திரி பிரதானிமுதலாகிய பேர்கள் சகல கோஷ்டத்துடன் பின்னால் வரவே, ஷெ யானை அதிவேகமாகவந்து கொடகாவாசலில் படுத் திருக்கிறவரிடம் வந்து நின்று துதிக்கையினால் தூக்கி உட்காரவை த்து கும்பஜலத்தையபிஷேகஞ் செய்து புஷ்ப ஆரத்தையுங் கழுத் தில்போட்டுத் தன் மத்தகத்தில் தூக்கிவைத்துக்கொண்டுபோய்ச் சிம்மாசனத்தில் வைத்து உடனே சகல மேளதாள வாத்தியகோஷ் டத்தோடும், மகுடாபிஷேகம் சூட்டிச் செங்கோலுங் கைக்கொடு த்து ராஜரீகஞ் செய்யும்படி வைத்தனர்கள். அது முதல் இராஜ விசாரணைகள் ஒழுங்காய் நடத்திவருகிறதோடு அன்றாடகம் வரு கிற வேதியர்கள், சிவயோகிகள், அதிதிகள், பிரையாணிகள் முத லானபேர்களுக்கு அவரவர்கள் விருப்பப்படி அன்னமுதலாகிய யெ துகேட்டாலும் யாதொரு குறைவின்றி, நடத்திவரும்படி வேண்டி யசத்திரங்களும், மடங்களும் ஸ்தாபித்து நடந்துவருகின்றது. தே வாலய முதலியவைகளுக்கு முன்வழக்கத்துக்கதிகமாகவே நடந்து

வருகிறது. சிம்மாசனம் வந்து சேர்ந்தவுடனே இராஜா தன் மாதா, பிதா, மனைவியையழைத்துவரும்படி பல்லக்குத்தண்டிகை முதலானவையனுப்பி வரவழைத்து, அரண்மனைக்குள்ளிருக்கும்படிசெய்து, மாதா, பிதாவுக்குவேண்டிய பணிவிடைகள் செய்துவிட்டு அப்புறம் இராஜ காரியம் பார்த்துவருகிறார். இப்படி யிருக்குங்காலத்தில் மங்குசெட்டியார் ஓராள்கையில் முன் கிரையத்துக்குக்கொடுத்தசுண்டுமுத்தைக்கொடுத்து உயரநோக்கிச்சுண்டும்படிசெய்து அது எவ்வளவுஉயரம்போயிற்றோ அவ்வளவுஉயரம்பணத்தைக்குவித்து அந்தப் பணத்தைவண்டிகளிலேற்றி ஷை முத்தைக்கொடுத்தவனைமடத்தில் வந்துதேடிப்பார்த்துக்காணாமல் அடுத்தபட்டினம்இராஜாவாகும்படி பட்டத்து யானை வந்து கொண்டுபோய்விட்டது யென்று தெரிந்து அப்பட்டினத்திற்கு வண்டிகள் சகிதம் ஷை பணத்தைக் கொண்டு போய் இராஜாவைக்கண்டு பணத்தின் வரவைத் தெரியப்படுத்தி ஒப்புக்கொள்ளும்படி தெரிவித்தார். உடனே இராஜா மங்குசெட்டியாருக்கு அதிக உபசாரணைசெய்து வேண்டிய பரிசுகளுங்கொடுத்து அனுப்பிவிட்டுப் பணங்களைப் பொக்கிஷத்திற் சேர்த்துக்கொண்டார். இப்படியிருக்குஞ் சமையத்தில் தம்பிமார்கள் தங்கள் நகைநகரம் ரொக்கமுதலிய சகல பூஸ்திதிகளையும் சூதுவிளையாட்டில் தோர்த்து அன்னியதேசத்தாசனுக்கு அரண்மனை முதல் ஒப்புவியத்துவிட்டு அன்னாகாரத்திற்குக்கூட வழியில்லாமல் கூலிவேலை செய்து அன்றாடகம் பட்டினியும் பசியுமாய் ஓர் காலிமடத்திலிருந்து கொண்டு சிலகாலமதிகவருத்தமடைந்து கொண்டிருக்குந்தருணத்தில் தென்தேசத்தில் ஓர் புதுராஜா மகா நீதியோடு செங்கோல்நடத்திவருகிறதுமன்றி, அதிதி பிரையாணிகள்முதலான பேர்களுக்குக்கேட்டதெல்லாம் குறைவின்றிக் கொடுத்துவருகிறாராம். நாமுமவ்விடம்போய் நம்முடைய வருத்தங்களைச் சொல்லி யேதாவது கொடுத்ததை வாங்கிப்பிழைப்போமென்றாலோசனைசெய்து நான்கு பேர்களும் ஷை பட்டினத்திற்குவந்து சேர்ந்து இராஜாவினுடைய பேட்டியிவர்களுக்குக் கிடைக்காததினால் இதற்கு யென்செய்வோமென்று யோசித்து, ஓர்யுக்திபதாவது ஷை நான்குபேர்களும் காட்டுக்குச்சென்று ஆளுக்கொருகட்டு விறகு தயார் செய்து விறகுவிற்

றெவர்கள்போல் விறகோ விறகென்று அரண்மனை முதல்வாசலில் நின்று கூவினார்கள். அச்சப்தமானது மகாபுண்ணியவதியாகிய இராஜபத்தினியின் காதில் கேட்கவே தன் கொழுந்தன்மார்களின் சப்தமென்றறிந்து, உடனே வேலைக்காரனையனுப்பி விறகு விற்கின்றவர்களை விறகுக்கட்டையவடத்தில் வைத்துவிட்டு அவர்களைமட்டுங் கூட்டிக்கொண்டுவாவென்று உத்தரவு செய்தவுடன் ௸ வேலைக்காரன் ஓடி விறகு விற்கிற நான்குபேர்களையும் கூட்டிக்கொண்டு வந்துவிடவே, தன் கொழுந்தன்மார்களும், அவர்களுடைய மனைவிகளுமாயிருக்கக்கண்டு அதிக வருத்தமுற்று உடனே தவசிப்பிள்ளையையழைத்து வெந்நீர் முதலான சாப்பாடு சீக்கிரத்தில் சித்தப்படுத்தும்படி ஆக்ஞாபித்துவிட்டு, இராஜாவுக்குத் தெரியும்படி செய்தனள். அச்செய்தியறிந்த இராஜன் சிம்மாசனம்விட்டு அரண்மனைக்குள் வந்து தம்பிமார்களையும், அவர்கள் மனைவிகளையும் பார்த்து அவர்களிருக்கிறநிலைமையுமுணர்ந்து உடனேஸ்நானஞ்செய்யச் சொல்லி அரண்மனைக்குள்ளிருக்கும் ஆடையாபரணங்களை யெடுத்துக்கொடுத்துத் தரித்துக்கொள்ளும்படிசெய்து போஜனமுஞ்செய்வித்து அதன்பின் யேதுகாரணம்பற்றி யிந்த நிலைமையிலானீர்களென்று, வினவ, எங்கள் புத்திஹீனத்தால் நாங்களிவ்தமானோமென்றனர்கள். உடனே தம்பிமார்களையும், அவர்கள் மனைவிகளையும் பல்லக்குச் சகிதம் அழைத்துக்கொண்டு தன்னுடைய முன்பட்டினத்துக்குவந்து சேர்ந்தவுடன் அப்பட்டினத்தைச் சூதால் வென்ற அன்னியராஜன் யெதிர்கொண்டு வந்தழைத்துக்கொண்டுபோய்ச் சிம்மாசனத்திலிருக்கச் செய்து இனியவசனங்கூறித் தங்கள் தம்பிமார்கள் புத்திஹீனர்களாய்ச் சூது முதலிய துஷ்டத்தனத்தினால், தோர்த்து என்வசம் விட்டுப்போன நாடு நகரமுதலிய சகல பூஸ்திதிகளையும் ஒப்புக்கொள்ளுங்களென்று, ஒப்புவித்துவிட்டுத்தன் தேசம்போய்ச்சேர்ந்தார். உடனே தம்பிமார்களையழைத்து அவர்களிடஞ் சகலமும் ஒப்புவித்து இனிமேலாவது புத்தியோடு, தெய்வத்திற்குப்பயந்து பிழையுங்களென்று சொல்லிவிட்டுத் தன்பட்டினம் வந்து சேர்ந்து சுகமாய் ராஜரீகஞ் செய்துகொண்டிருக்கின்றனர்.

௨

தேவி துணை.

சிவ்யோகிமகிமை.

அவந்திதேசமென்கிற ஓர் நகரத்தில் ஒரு பிராமணனிருந்தான். அவனுக்கு வளப்பம் பொருந்திய திரவியங்கள் மிகுதியானதினால், சந்தியாவந்தனத்தையுஞ், சிவார்ச்சனையையும், ஜெபத்தையுந் தன் குலத்துக்குறிய கருமங்களையும், மற்றுமுள்ளவைகளையுமனதிலும் நினையாமல் மறந்து இழிவான ஜாதியிலுள்ள குலமாதரைத் தினந்தோறும் புணர்வானுகின்ஞன். அதுவுமன்றி இம்மாதர்கள் யெச்சாதியெத்தொழில் புரிகின்றவர்கள் இழிவுள்ளவர்களோவென்று. ஆராய்ந்தறிந்திலனுய்மையணிந்த கணகளையுடைய மாதர்கள் கிடைத்தார்களென்கிற மகிழ்ச்சியினல், அவர்களிடத்திலுண்ணுகின்ற அரிய அமுதும், அளவில்லாதமாமிசமும், பலபண்டபதார்த்தங்களுமருந்தி மனமகிழ்ச்சியடைந்திடுவன். இப்படியிருக்குங்கால் மங்கைப்பருவமுள்ளவளாயிளங்கொடிபோன்ற பிங்கலையென்கிற பேரையுடைய மாதுடன் சேர்ந்து அவளுடைய குங்குமமணிந்துள்ள ஸ்தானத்திற்றோய்ந்து புணர்ந்து அந்தவின்பததினல் அறிவழிந்து பரவசப்படுவதினல், இஃது நற்செய்கை துற்செய்கையென்று மனதிலூராமல், இரவும் பகலுங் களிப்புள்ளவனுய்ச்சோர்ந்து மயக்கமுற்றிருந்தனன்.

கவி.

எக்குலமங்கைய ரெத்தொழினின்ற விழிப்பினரென்றுணரான்
மைக்கண் மடந்தையருற்றன ரென்ற மகிழ்ச்சியினங்கவர்பாற்
றுய்க்குமரும்பதமட்டினருந்தசை தொட்பிகள் கண்டவெலா
மோக்கவிருந்துகளிப்பினருந்தி யுளத்தின் மகிழ்ந்திடுவான்.

மங்கையிளங்கொடி பிங்கலையென்று மடந்தையுடன் புணரா
வங்கவள் குங்கும கொங்கைமுயங்கி யழிந்தவசம்பெறலா

லிங்கிது நன்செயலன்றிது புன்செயலென்பதுளங் கருதான்
கங்குலு நண்பகலுங் களிகொண்டு கலந்துமயங்குறுவான்.

இங்ஙனமிவ்வாறிருக்கும்பொழுது ஒலிக்குஞ் சாகரத்திலுண்டாகிய, விஷந்தங்கிய காளகண்டத்தையுடைய பரமசிவனது கிருபையைப் பெற்ற சிவதவம்பொருந்திய பரிசுத்தனும், பிறவி நீங்கும்படி அறிவடங்கிய துரியாவத்தைபோல சாக்கிராவத்தையிற் பொருந்திய மதியினாலதற் செயலென்பதொன்றுமில்லாமல் நீங்கத்தக்கதாக நிலைதவறாதிருக்கின்ற விடமனென்னுந் திருநாமம் பெற்ற ஓர் சிவயோகியானவர் மேற்சொல்லிய பிராமணனுமவனுடைய மனைவியும, வாழும் வீட்டின் முற்றத்தில் வந்து நின்றார். அவ்வாறு வரலும் கொத்தாகிய மலர்களணிந்த அளகபாரத்தையுடைய தன்மனைவியுடன் இந்தப் பிராமணன் சிவயோகிக்கெதிர்சென்று முறையின்படியுபசாரங்கள் அர்க்கியம், பாத்தியம், ஆசமனம்செய்து அழகு பொருந்திய மகரந்தம் நிறைந்த மலர் பரப்பிய ஆசனத்திலிருக்கச் செய்து நல்ல பசுவின்பாலும், மதுரமுள்ளமாம்பழமுங்கொணர்ந்து நாதனேயருந்துகவெனவும், குளிர்ச்சிதங்கிய சலமுங்கொடுத்து மலராலருச்சித்துச் சீதளமுள்ள சந்தனமணிந்து கொள்ளும்படி பிரார்த்தித்து நல்லவுபசாரவார்த்தைகளுஞ்சொல்லி தாம்பூலமுங்கொடுத்து அன்று ராத்திரி முதல் விடியற்காலம்வரையில் அப்பூசுரனுமனைவியும் அம்முனிவருடைய இரண்டு பாதங்களையும் வருடிக்கொண்டிருக்கச் சயனித்துக்கொண்டிருந்த யிருவகைப்பற்று நீங்கினவராகிய சிவயோகி இரவிவருமுன்னெழுந்து போய்விட்டனர். அப்புரவவ்வேதியனுமனைவியும, மன்மதனும் ரதியும்போல இன்பசுகங்களையனுபவித்துக்கொண்டிருந்து சிலநாட் சென்றபின்னர், பழவினைத்தொடர்ச்சியினால் முன்னும் பின்னுமாக, அவ்விருவருமிவ்வுலகம் விட்டகன்றனர்கள்.

இங்ஙனம் இவ்வாறிறந்த அந்தணன் தருமமும், நீதியும்முறைமையுமாறுபடாமல் மேகங்கள் மின்னி மழை பொழியும்படி வளப்பமுள்ள தசானன் நகரத்தையாளுகின்ற வச்சிரவாகுவென்னும் அரசனுடைய மனைவியின் கருப்பத்திலடைந்து, நல்லுருவந்தங்கிய கருப்பமாய்ப் பொருந்திய காலத்தில்.

கருப்பமுற்றவள் பின்வருந்தேவியரனைவருங்கனன்றீண்டு
விருப்பமாயவள் கட்டுறைக் குழவியை விளிவுசெய்குதமென்ன
உருப்பவல்விடமுணவினோடளித் தனருண்டனளுதரத்தின்
நெருப்பையொத்து நின்றெரிதந்துகரிந்தது நிகரிலாளுருவம்மா.

இங்ஙனம் கருப்பமடைந்தவளுக்குப் பின் வந்த தேவிமார்கள் குமரிசமையக் கிழவி யேதுவோ செய்தாற்போல் பொறாமையுற்றுக் கோபங்கொண்டு யெல்லாருமொன்றாகச் சேர்ந்து மூத்தவள் வயற்றிற் பொருந்திய சிசுவைக் கொன்றுபோடுவோமென்று ஆலோசனை செய்து, அவளுக்கு விருப்பமாயாகாரங்கொடுப்பவர்கள்போல் விஷத்தைக் கலந்து கொடுத்தார்கள். அவளதையறியாமல் புசித்தவுடன் அந்தவிஷமானது, நெரிப்பையொத்து எரிந்ததினாலவளுருவம் கரிந்து உண்டவிஷத்தின் வெப்பத்தினால் வயிற்றினும், உடல்முழுவதும்பலவகையாகிய வியாதிகொண்டும் ஊழ்வினைப்பிரிசினால்இறந்திலளாய் நம்பரமபதியின் கிருபையினால் இறவாமலிருந்த சிசுவைப் பெற்றனள். பெற்றபின்பு, சுமதியென்னுந் தாயுமவள் புதல்வனும் அழிநோயுள்ள புண்ணினால் வருந்திச்சகிக்கமாட்டாமல் அலறலுற்றனர். எமனைப்போன்ற ஓர் மனைவியினாற்படுந் துன்பமளவற்றனவாயிருக்கப் பலமனைவிகளை வேட்டம் புரிதலின் பயனை இங்ஙனமறிவதாக. இவ்வண்ணமிவர்களிடைவிடாமல் அழுகிற ஓசையை வச்சிரவாகு வென்னுமரசன் கேட்டு துன்புற்று வயித்தியர்களை நோக்கி இவ்வியாதியை நீக்குங்களெனச்சொல்லத் தாங்களாராய்ச்சி செய்திருக்கின்ற வயித்திய சாஸ்திரப்பயிர்ச்சியின் ஸ்திரத்தினாலும், தங்கள் முன்னோர்கள் கற்பித்திருக்கும் கல்வியினாலும், யுத்தியினாலும் செய்யப்பட்டிருக்கும் நல்ல அவுஷதங்கள் பலபலவாகச் செய்துகொடுத்தும், தங்கியபிணி தீர்ந்ததில்லை. வியாதியதிகரித்து வாகடர் மலைவுற்று, அரசனைநோக்கி இந்நோயைத் தீர்க்க யெங்களாலாகாதெனச் சொல்லக்கேட்ட அவ்வரசன் பெருந்துன்புற்று தன் புதல்வனு மனைவியும், ஓயாதழுகிற சப்தத்தைக்கேட்டு யார்தான் துயில்வார்களென்று கருதி.

என்றுமைந்தனை மனைவியை யிழந்து மற்றிளைய தம்மனையார்பாட்
டொன்றும்மன்பின்னுகி மற்றவர் நவனுண்டு வாழிகலவேந்தன்
கன்றுநெஞ்சினன் சூதனைக்கூவியிக்கயுத்தியை மகவோடும்
இன்றுதேர்மிசைக் கொண்டுபோய்க் காட்டகத்திடைவிட்டுமீள்-
கென்றான்.

பகுத்தறிவில்லாதவ்வரசன் இளையமனைவிகளிடத்தி லார்வமு ற்று மூத்தமனைவியையும். புத்திரனையும் வெறுத்து வெம்பிய மன தையுடையவனுய் தேர்ப்பாகனையழைதது இந்தப்பாவியையும் இவ ள்புத்திரனையும், இன்று தேரேற்றிக்கொண்டுபோய் கானகம் விட்டு வாவெனக் கட்டளையிட்டருளினர். அவ்வுத்திரவை மேற்கொண்டு அவ்விருவர்களையுந் தேரின்மேலேற்றுவித்து. நன்மார்க்கங்கடந்து முட்களையுடைய காட்டகத்தில விடுத்து இராஜனுக்கறிக்கையிட்ட னன். தேர்ப்பாகன் போய் பின்னர் இராஜஸ்திரியானவள், அந்த வெளிக்காட்டில் தனித்தவளாய் வருத்தப்படுத்துகிற நோயின் மிகு தியினுலும், சூரிய கிரணவெப்பத்தினுலும் தானுந்தன் புத்திரனும் துன்பமடைந்து, நாற்புறங்களிலுமலகைகளும், புலிகளும், வராகங் களும் துன்பப்படுத்த ஓரிடத்துக்குப்போக மார்க்கந்தோன்ருமல் அறியதாகிய வீதியை வெறுப்பள், நொந்துசோர்வுருவள், தனக் குரியகணவனுடைய கொடுமையை நினைந்து கண்கள் பொழிகின்ற நீரில் தோய்வள், மிகுந்த நோயைச் சகிக்கமாட்டாமல் அழுகிறதன் பிள்ளையின்வாயில் முலையைவைத்துப்பாலூட்டுவள், தீயையொத்து இடைவிடாமல் தன்னுடலைச் சுடுகின்ற பசியினுல் துன்பமெய்தி கொடிய கோபங்கொண்டு கொலைத்தொழில் புரியுமிருகங்கள் சஞ் சரிக்கின்ற காட்டைவிட்டு நீக்கி பஞ்சினும் மெல்லியதாகிய தன் பாதத்தில் உதிரம் பெருகும்படி மிருதுவாக நடந்துபோகும்போது அழகுள்ளதாகிய ஓர் நகரத்தைக்கண்டு அதனிடத்திற்போயினள், அந்நகரத்தின் வணிகேசனுகிய மிகுந்த திரவியத்தையுடைய பது மாகரனென்போனது வீட்டின்றேளியானவள் அந்த ராஜஸ்திரி யைப்பார்த்து நீயரசனுடைய ஸ்திரீயைப் போன்றிருக்கின்றனை அப்படிக்கிருக்க நீயும் இப்புத்திரனும் ஏழைகள்போற் சோர்வடை ந்து இவ்வீதியில்வரக் காரணமியாது, அம்மாவுரை யென்றனள்.

விம்மிவிம்மி நெஞ்சளிந்து வாய்புலர்ந்திட விழிவழிநீர்சோர
அம்மவம்மவோர் ஊழ்வினை விளைந்தமையாற் குறைக்குவனென்று
வெம்மை நெஞ்சுடைத்தலை மகனிழைத்தது மேதிலார்வினையீட்ட
இம்மையிவ்விடருற்றிவண்புகுந்ததுயிற்றெனவுரை செய்தாள்.

இங்ஙனம் இவ்வாறு தோழிகேட்டவுடன் மனமழிந்து கண்களில் நீர் தாரைதாரையாகப் பெருகவும், வாயுலரவும் தாயே ஊழ்வினை நேரிட்டதை யெவர்களுக்குச் சொல்வேனென அழுதுகொண்டு இரக்கமில்லாத தன் கணவன் செய்ததையும் அயலவர்களாகிய சக்களத்திமார் கொடிய செய்கை செய்ய அதனாலிப்பிறப்பிலேதானே இப்படிக்கொத்த துன்பமடைந்து இவ்விடத்தில் யான் வந்ததுமிவ்வாறுமென்றுரைத்தனள். உடனே தோழி அதிக விரைவாக ஓடிச்சென்று வணிகேசனுடைய இரண்டு பாதங்களையுந்தொழுது ஐயனே! ஒரு ராஜஸ்திரியானவள் நம்மிட நகரத்தையடைந்து ஓர் குழவியை யேந்திக்கொண்டு வருந்தி மிகுந்த சிக்குடையவளாயவள் கணவனாகிய அரசன் காட்டிலனுப்பிவிட வந்து நம்மிடவீட்டுக்கடைத்தலை சார்ந்திருக்கின்றனளென, தருமசிந்தையிலும், தியாகத்திலும், நீதியிலும், தயையிலும் தனக்கொப்பில்லாதவனாகிய அவ்வணிகேசன் அவ்வாறு கேட்டமாத்திரத்தில், வருந்துகின்ற மனத்தையுடையவனாய் வெளியிலவந்து அவ்விடத்திலிருக்கும் அருமருந்தையொத்த குழந்தையையும்தாயையும்பார்த்து இங்கேவாருங்களென்று அழைத்துக்கொண்டுபோய் ஓர் வேதியன்வீட்டிலவர்களையிருக்கும்படிசெய்து, அவ்விடத்திலிருக்கும் வைத்தியர்களையெல்லாம்வரவழைத்து மிகுந்த திரவியங்கொடுத்து இந்த ராஜஸ்திரி யென்னைப் பெற்றதாய், இக்குழந்தை யெனது சகோதரன், ஆதலாலிவர்களுக்குப் பொருந்திய கொடிய விஷநோயை அவுஷதங்களால்முறித்து விடுங்களென்று சொல்ல, அதைக்கேட்ட வாகடர்கள் தாங்கள் கற்றுணர்ந்த வைத்திய சாஸ்திரத்திற் சொல்லுமவுஷதங்களையெல்லாம் இன்னதினால் தீருமென்று வகையறிந்து கொடுக்கப் பழமையாகிய வியாதியானது கொடுமையுடனதிகரித்து நெய் நிறைந்த குடத்தை எறிந்த மாத்திரத்தில் அக்கினியானது சிகைவிட்டெழுந் தன்மைபோல் அளவில்லாத நல்லமருந்துகளைக்கொடுக்குந்தோறும் அவ்வி

யாதிமேலிட்டு துன்பஞ்செய்தலினால் இடைவிடாமலழுது சோர்ந்த புத்திரனிறந்தனன். அவனிறக்கவே அளவில்லாத துயரமுண்டாகப் புற்றிலிருக்கும் சர்ப்பமானது இடிவிழுந்தாற் பூமியில் துடிப்பதுபோலபூமியில்விழுந்து புரண்டழுதனள், இரண்டு கைகளாலும் முலைமுகட்டில்மோதிக்கொள்வள், அம்புபாய்ந்தமயிலைப்போல் சோர்வள், தேம்புவள் புத்திரசோகத்திலமிழ்ந்துவள், நின்று நின்றுருகுவள், பெருமூச்சுவிடுவள் துன்பமடைந்தலருவள்.

அயலகத்துறை யந்தண மாதரு
மயலகத்து வணிக மகளிருங்
கயலையொத்தகட் காரிகைபாலெய்திச்
செயலுணர்த்தித் தெருட்டவுந்தேறலாள்

177679

இவ்வாறு துயரப்படுகிற அந்த ராஜஸ்திரியைப்பார்த்து அயல்வீட்டிலிருக்கும் பிராமணஸ்திரிகளும், மயக்கத்தை நீக்கத்தக்க வைசியமாதர்களும், இவ்வுடலநித்தியமேயல்லாமல் நித்தியமல்லவென அநேக திஷ்டாந்தங்களைச் சொல்லித் தெளிவிக்கவுமவள் துக்கம் நீங்கிலளாய் இறந்த தன் மகவைநோக்கி அப்பனே! நம்முடைய அரசன் நீக்கிவிட்டபடியாலாதரவில்லாமற்றளருகின்ற என்னைநீயுங் கைவிட்ட கொடிய தன்மையானது வருத்துவதினால் மெலிவடைந்தேனினிப் பிழையாதுயிர் துறக்கவல்லேனென இவ்வாறு சொல்லிச்சொல்லியழுகின்ற சுமதியென்பவள் தன்னையாதரிக்கும் வர்த்தகன்வந்து தேற்றறவான வார்த்தைகளைச்சொல்லித் தேற்றவுந் தேறாமல் மனம்வருந்தி சோபமுறும்போது, முன்னடந்தவைகளையெல்லாம் அறியத்தக்க விடபன் என்ற சிவயோகியவ்விடத்தில் வந்தனர். வந்த சிவயோகியை அந்த வர்த்தகன் கண்டு பாதங்களில் வணங்கி யென்னையனே! இந்த இராஜஸ்திரீயின் அரிய துயரத்தைத்தீர்க்கக் கிருபைபாலியுமெனச் சொல்ல; அம்மாது சிரோன்மணியைப்பார்த்து சிவயோகி இவ்வாறு சொல்லலுற்றனர்.

என்னைமாழ்கி யிரங்குவதேழை நீ
பொன்னுமாவி பொருந்திய காயமு
மின்னுமொக்குளும் போனணிவீந்திடும்
அன்னதுள்ளியறிஞரழிவுறார்.

தாயே நீ யிரங்கித் துயரப்படுவதில் என்ன பிரயோஜனம்
திரவியமும், உயிர்பொருந்திய இவ்வுடலமும் மின்னலைப்போலவும்,
நீர்க்குமுழியைப் போலவும், விரைவிலிறந்துபோய்விடும். ஆகை
யாலதைக்கருதி அறிவுள்ளவர்கள் வருந்தார்கள். மூன்றுவிதக்கு
ணத்தின் முயற்சியால் ஒவ்வொருகுணம் சேர்ந்த முறைமைப்படி
உண்டாகுங்குறியினால் மனிதர்களென்றும், தேவர்களென்றும் வந்
து அவைகளனுபவிக்கவேண்டிய போகங்களையனுபவித்துத்தலைந்த
பின்னுடலுமழிந்துபோம். பூர்வவாசனைசேர்ந்த பயிர்ச்சியினாலு
ண்டான சரீரத்தை நிலைமையென்று எண்ணுவார்களோ, தேவர்
களேயானாலும் மறுபிறப்புண்டென்றாலுயிரானது சரீரத்தைவிட்டு
நீங்கிப்போவது உண்மையாகும். ஒரு சரீரத்திலுண்ட புசிப்பினாற்
பொருந்திய தீயமலமானது நாள்தோறும் நீங்கிவிடும். தாயே நீ
யதைக்குறித்து உன்மனதிலிப்படிக்கொத்த துயரத்தைவைக்காதே
யிப்போது நீங்கிய மலத்தைக்குறித்து யேனெங்குமிறப்பதும்,
பிறப்பதுமாகிய தன்மையைத் தேவர்களுங் கடக்கமாட்டார்களிது
வுறுதியாம். தாயே நீ துயரப்படுவதினால் வந்தது நீங்குமோ, முன்
னிருந்தவர்களில் போனவுயிரை அழுதுமீட்டுவார்கள் யாராவதுண்
டோ, பெரியமலையினுச்சியில் சந்திரோதயமானதுபோல் யானையின்
பிடரியிமேலேறிக்கொண்டு நிலலைச்செய்கின்ற குடையின்கீழாகப்பவனி
வந்த அரசர்களும், கடல்சூழ்ந்தவுலகத்தில் விழுந்திறந்துபோனா
ர்களேயல்லது உடலையெடுத்து யெவர்கள் யிறப்பை நீங்கினவர்கள்
இறந்துபோன புத்திரன் பொருந்திய உங்கள் விருப்பத்தினால் பிற
ந்தவனல்லன், மேலும் உங்கள் வெறுப்பினால் மடிந்தவனுமல்லன்,
பின்னப்பட்ட கூட்டைவிட்டு நீங்கியாகாயத்தில் பறந்துபோகின்ற
பட்சியைப்போல் உடலைவிட்டு மறைந்துபோனான். தாய்தகப்பன்
மார்களுடைய இன்பச்செருக்கினாலுண்டாகிய சுக்கில சுரோணித
மானது தாய்வயற்றிலொரு கருவாகத்தரிப்பதற்கு முன்னமேயவர்
கள் நொந்துவருந்தும்படி மாய்ந்துபோம், கருப்பத்திலேதானே
யிறக்காவிட்டாலும் உறுப்புகளெல்லாம் பொருந்தி பத்துமாதமுமா
னபின்பு யிவ்வுலகத்திற் பிறந்து பந்து ஜனங்கள் கண்டழும்படி
யிறந்துபோம். பூவையணிந்த யளகத்தையுடையவளே, பிறந்தவுட
னிறவாமலிருந்தாலழகிய பிறைபோல்வளர்ந்து சொன்னகல்விகளைப்

பகுந்தறிந்துகொள்ளும்படியான பருவத்திலிறந்தாலு மிறக்குமல்லது அப்போது இறத்தலன்றி, அழகுடன் வளர்ந்து அகிர்ப்புகைபூட்டத்தக்க அழகத்தையுடையவளே, மன்மதனைப் போய்க்கண்டவர்கள் பார்வையைக் கிரகிக்கும்படியான சௌந்தரிய முள்ள உருவத்துடன்வளர்ந்த பின்பு இன்பமுள்ள நல்லரிஷபம் போல் காளைப்பருவம் பொருந்திய விவாகஞ் செய்யுங்காலத்திலிறந் தாலுமிறந்துவிடும். கல்வி நிறைந்த வாலிபர்கள், சந்தோஷத்தை யுஞ் செல்வச்செருக்கையுமனுபவித்துச் செழுமையாகவாழும் நாளில்மிகுந்த பாவமாகிய அஞ்சத்தக்க புலிபற்றின மாத்திரத்தில் சேர்ந்து மானிறப்பதுபோல் இறந்துவிடுவார்கள். மான்பார்வைபோல மருண்டபார்வையுடயவளே, கிழக்குரங்குபோல் உடல்வளைந்து கையிற்கோல்பிடித்தூன்றிக்கொண்டு மற்றயாவருமிகழும்படி மலசலங்கள் வஸ்திரத்திலேதானே கழலும்படி ஒன்றுந்தெரியாமலிருந்து இறந்துபோவதும் ஒரு பிரகாரமாம், இறப்பதற்குக்காலந்தான்காரணமென்று சிலர் சொல்வார்கள், முக்குணங்காரணமென்பார்சிலர். பிருதிவி. அப்பு, முதலாகிய பஞ்சபூத சம்மந்தமானயிவ்வுடல்மேற் சொல்லிய மூன்றுக்குமேற்றதென்று சிலர்சொல்லுவார்களாகையினாலே யிப்படிப்பட்ட சரீரத்தை ஞானமுள்ளவர்கள் பொய்யெனவெண்ணி சாவதற்கும் பிறப்பதற்கும் துக்கமுஞ் சந்தோஷமுமில்லாதிருப்பார்கள். கோவைக்கனியொத்தவாயையுடைய கொடிபோன்றவளே, பூமியிலெழுகின்றதுகள் மறுபடியுமந்தப் பூமியிலேதானே கூடுவதுபோல யெவ்விதமாகிய விகற்பங்களையுடைய யெவ்விதச்சரீரங்களும் மாயையில் தோன்றியதிலேதானே யொடுங்கும். அன்னம்போல்பவளே, பொருந்திப் பூர்வசென்மத்திலுன்னைப் பெற்றவர்களையு முன்னாற்பெறப்பட்டவர்களையு முன்னைவிவாகஞ் செய்துகொண்டவர்களையும் அலைகளையுடைய சமுத்திரத்தின் சிறிய மணலையெண்ணினாலு மெண்ணுமளவையுடையவர்களோ, பாகுபோல் மதுரமுள்ள வசனத்தையுடையவளே, காலமாகிய பாம்பின் வாயிலகப்பட்டுக்கொண்டிருக்கிற மனிதர்களாகிய தேரைகளுக்குச் சந்தோஷமுஞ் சிறிதுண்டாகுமோ சொல்லு. பழமையாகிய பிரமதேவன் ஆதியிலிந்தவுடலைச் சிருட்டித்துத் தந்தநாளில் தனுகரணங்களும் நினைக்கும்படியாகிய புவனபோகங்களும் தொடர்ச்சியாயிருக்கின்ற

மையால் மத்தியில் நூதனமாயொன்றும் வராது. தோலும், எலு ம்பும், நரம்பும், மாமிசமும் பொருந்திய யிரலும் பித்தநீரும் நிறை த்துவைத்த கடம். உடைந்துபோய்விட்டது. இதற்காக நீ புலம் புவது என்னகாரணம், சரீரம் யித்தன்மைத்தாயிருப்பதினால் திரி நேத்திரங்களுடையவரும் திரிபுரங்களில் தீபற்றநகைத்தவருமாகிய பரமசிவனுடைய பாதங்களை வணங்கும் அன்பர்கள் நமனை வெல்ல லாமேயல்லது, மற்றவர்கள் யார் வெல்லத்தக்கவர்களென்று சிவ யோகி சொன்னார். இவ்வாறு சிவயோகி சொன்னதையெல்லாம் இராஜஸ்திரிகேட்டு உடனே பெயர்ந்து வானிலுண்டாகும் நீர்த்தா ரையைக் காந்தண்மலரால் துடைப்பதுபோல் மைதீட்டாத கண் பொழிகின்ற நீர்த்துளியை வளையணியாதிருக்கின்ற கரங்களாற்று டைத்து தேனிறைந்த பூமாலையணிந்த மகுடந்தரித்த அரசன்கோ பங்கொண்டு நீக்கிவிட்டதினாலும் உள்ளுயிரை வருத்தும் கர்மரோ யினால் மெலிகின்ற யெனக்கு இறந்துபோன யென்புத்திரனுடன் நாளும் இறந்துபோவதே நீங்காத துன்பத்தில் விழாத விரதமென் றுமுரைத்து தீயுந்தன்மைகொண்ட பசியபயிரை வாட்டுகின்ற கோ டைவெப்பந்தீரும்படி மேகங்கள் நீர்த்துளியைச்சிந்தி வெப்பத்தை யாற்றுந்தன்மைபோல் கிருபைபொருந்திய மனதையுடைய முனி வரே, தேவரீர் வந்தருளிய கிருபா நோக்கத்தை நானிறக்கும் சமை யத்திற் பெற்றுக்கொண்டு தீவினைக்கொடுமையை நீங்கினவளாகி னேனென்றனள். இங்ஙனமிவ்வாறுரைத்த இராஜஸ்திரியிறப்பத ற்குத் துணிந்த நிச்சயத்தையறிந்து இந்தப்புத்திரன் முற்பிறப்பில் தனக்கு உபசாரஞ்செய்தவனென்பதையுமெண்ணியவனுடைய ஜீர் வமகவினுயிரை மீட்டும் வகையை அம்முனிவர் செய்ய ஆரம்பித்து பால்போன்ற வெண்மை நிறங்கொண்டு விளங்காநின்ற திருநீற்றினை ப்பரிவுடனெடுத்து பாலசந்திரன்போல்பவனாகிய அப்புத்திரனுடை யதுதலிற் பிரகாசிக்கும்படி தரித்து விஷத்தினால் கறுத்தகண்டத் தனாகிய பரமசிவனுடைய திருவடிகளைத்துதிசெய்து 'பஞ்சாக்ஷரத் தைக் காதிலுபதேசித்தளவில்,

> பைந்தாட்கமலக் கண்மலர்ந்தெனப் பாலன் செங்க
> ணந்தா துயிலிழித்திட நற்றுயினீங்கினான் போன்
> முந்தாவெழுந்தே முலையுண்ண முயலும் வேலை
> செந்தாமரைமேற்றிருவன்னவள் சேர்ந்து புல்லி.

பொல்லாவறுமைத் துயர்பூண்ட பொறியிலாள்
னில்லாத செம்பொன் கிடைத்தாங்கணிழந்து மீள்
கல்லாதரவொத்தொடு பெற்றென நங்கையோகை
நில்லாது பொங்கக்களிப்பெய்தினின்றகாலை.

இங்ஙனம் பசியதாளையுடைய தாமரை மலர்கள் மலர்ந்தது போல் இறந்திருக்கும் புத்திரன் களைதீர்ந்து துயிறுறந்தவன்போ லெழுந்து முந்திமுலையுண்ணத்தரவினபோது திருவையொற்ற அந்தஇராஜஸ்திரி தன் மகவைக்கிட்டி அணைத்துக்கொண்டு கொடியவறுமைத்துயரத்தைக்கொண்டிருந்த அங்கப்பழுதுமுள்ள வனுகிய வொருவன் தனக்கில்லாத திரவியத்தைப் பெற்று உடனே இழந்து மறுபடியும் இரவியத்தை மிகுந்த ஆசையுடன் பெற்றுக்கொண்டது போலுலகை தனக்குளடங்காமற் பொங்கக்களிப்பையடைந்து நின்றனள். அங்ஙனம் கிருபைக்கடல்போல் விளங்குகின்ற அம்முனிவரானவர் இதள்களையுடைய தாமரைமலரானது மகரந்தப்பொடியைச் சிந்துவதுபோலத் தம்முடைய கரத்தினுல் இராஜகுமாரன் மேலும், இராஜன் மனைவிமேலும்தரித்தனர். அவ்விபூதி தரித்தமாத்திரத்தில் வெறுவிய இரும்பில் தெளிவான தன்மையுள்ளரசத்துளியைக்குத்தினவுடன் அவ்விரும்பு நல்ல பொன்னுகு அலங்காரமுள்ள தன்மையைப் பெற்றதுபோல் நோயினுலுண்டாகிய புண்கள் நீங்கியவர்கள் சரீரம் பொன்னிறம் பொருந்தினுர்கள். உடனேபரமபதியின் திருவடியைப்பணிகின்ற சிவயோகியின் பாதங்களை நாவினுல்துதிசெய்து பணிந்து இறந்த புத்திரனுடைய பிராணனைக்கொடுத்து எங்களுக்கு நேரிட்ட நோயினுல் அஞ்சுகின்ற துயரந்தீர்த்துங் கிருபையுள்ளவராயிருக்கின்ற தேவரீருக்குச் சிறிய மானிடர்களாகிய நாங்கள் என்ன பிரிது உபகாரஞ்செய்வோம். யெங்களுக்குசுவாமிகளின் திருவடியே ஆதாரவென்று சிவயோகி தன் பாததாமரையில், வணங்கினர்கள்.

இறைஞ்சி வீழ்ந்திடு மிருவர் தம்மையுஞ்
சிறந்தகைகளா லெடுத்துச் சீரியோ
னிறைந்தவோகையாணிகழ்த்து மாசிக்
ளறைந்து நாமமுமறியக் கூறினுன்.

அவ்வாறு சொல்லிவணங்கிய யிருவரையும் தம்முடைய திருக்கரங்களாலெடுத்து நிறைந்த சந்தோஷத்துடன் ஆசீர்வாதஞ்செய்து அப்புத்திரனுக்குப் பத்திராயுவென்று பேருங்கொடுத்து உன் புத்திரன் வளர்கிறவரைக்கும் தன் வீட்டில் இவ்வர்த்தகன் ஆதரிக்கக்கடவன் என்றும், உன்புத்திரன் சாஸ்திரங்களையெல்லாமோதியுணர்ந்து எம்மிறைவன் கிருபையால் கெடாத செல்வமும் நல்லஅரசாட்சியுமடையக்கடவன். மகுடந்தரித்துக்கொண்டு மன்னவனாகிவருந்துகின்ற மூப்புப்பருவமும் வியாதியுமில்லாமலிருக்கிற தேவர்களைப்போல் இவ்வுலகத்தைக்காத்துக்கொண்டு நெடுநாளிருப்பானென ஆசீர்வதித்துச் சென்றனர். ஆனதால் எம்பரமபதியாகிய சிவபெருமானின் றிருத்தொண்டுபுரிந்த அடியார்களின் மகிமையும், பெருமையு மிக்கதையாலறிந்துணர்ந்து இனிமேலாகிலும் சிவவழிபாடியற்ற முயலக்கடவீர்களாக,

வெண்பா.

ஐந்து முகத்தானடியாற் செயல்கேட்டிங்
குய்ந்தமனமாவதறகுகந்திடு நீ—பைந்தொடியார்
பக்கஞ்சேராது பராபரியாள் தன்னையிடப்
பக்கஞ்சேர்ந்தானைப் பகர்.

ஐந்துதிருமுகங்களாவது:— ஈசானம், தற்புருஷம், வாமம், அகோரம், சத்தியோசாதம் என்பவைகளாம். யீசானமுகம்படிகநிறமுள்ளதாக மேல்நோக்கிய பார்வையாயிருக்கும். தற்புருஷமுகம் பொன்னிறமுள்ளதாய்க் கிழக்குத்திசை நோக்கியிருக்கும். அகோரமுகம் தெற்குநோக்கி நீலநிறமுள்ளதாயிருக்கும், வாமமுகம் பொன்னிறமுடன் வடக்கு நோக்கியிருக்கும், சத்தியோசாதமும் வெண்மை நிறமுள்ளதாய் மேற்குநோக்கியிருக்கும். சிவாலயங்களில் தீபாராதனை செய்யும்போது நாலு திபத்தட்டு நாலுதிக்கிலும், அந்த நாலின் மத்தியில் ஒருதட்டுமாக ஐந்துதட்டுவைத்து தீபாராதனை செய்வது, பரமசிவனுடைய பஞ்சமுகங்களுக்கும் தீபாராதனை செய்கிற பாவனையாம், மத்தியில்வைத்திருக்கிற மீசானமுகத்தட்டு முதலிலும் பின்பு தற்புருட முகத்தட்டு முதல் நான்கு

தட்டும் மேற்சொல்லிய திருமுகக்கிரமப்படி யெடுத்து தீபாராதனை செய்வது சிவலிங்கப்பெருமான் மேற்கு நோக்கிய சந்நிதியாயிருந்தால் அநதத்திக்கு நோக்கிய திருமுகமே, தற்புருஷமுகமாகத் தற்புருஷத்தட்டுவைத்து தீபாராதனை செய்யும்படி ஆகமவிதியாம், தெற்குவடக்குநோக்கிய சந்நிதிகளாயிருந்தால் அந்தந்தத்திசையே தற்புருஷமாகக் கொள்ளவேண்டும். இவ்வாறாய் பஞ்சமுகமூர்த்தியாகிய நம் சிவபெருமானின் அடியார்களின் மகிமையும். செயலையுங்கிருபா நோக்கத்தையுங்கேட்டுணர்ந்து உய்திபெற மனந்திரும்பு. நுண்ணிய யிடையையுடைய பாகர்களைச்சேர்ந்து அம்மயக்கத்தால் வீண்காலம் போக்காது எம்பரம பராபரியாகிய உமாபதியை வாமபாகம் வைத்துச் சேர்ந்தோனாகிய சிவபெருமானை ஸ்துதிக்கக்கடவாயாக.

சிவனடியார்களின் மகிமையை முற்றிலுமுணர்ந்து உய்திகூடும்பொருட்டு இதனடியில் வரைந்துளவற்றிற்கு நண்பர்களே! சற்று செவிசாய்மின்கள்:— இங்ஙனம் முற்கூறிய பத்திராயுவை முன்சென்னத்திலணைந்த மனைவியாகிய பிங்கலை யென்ற மாதானவள் விடபனென்னுஞ் சிவயோகிக்கு ஓர்நாளிராத்திரி திருவடிகள் வருடிச்செய்த உபசாரத்தினாலிவ்வுலகத்தில் திருமகள் வந்துற்பவித்ததுபோல் போர்செய்வதற்கேதுவாகப் பொருந்திய வேலாயுதத்தையுடையவனாப்ப் புகழ்பெற்ற சந்திராங்கதனென்னுமரசனுக்குக் கற்புள்ள மனைவியாகியசீமந்தனிவயிற்றில் புத்திரியாய்ப் பிறந்து கீர்த்திமாலினி யென்னும் பேர்பெற்று ஆகாயத்தில் இருள் நீங்கவளர்கின்ற இளஞ்சந்திரனைப்போல் சந்திராங்கதனுடைய குலமானது ஓங்கும்படி வளர்கின்றனள். இதுநிற்க, பத்திராயுவும், வணிகேசனுடைய புத்திரனாகிய சுனைபனென்பவனும் வித்தியாதரனைப்போல் வீணையின் வகைகளைக்கற்றும் வேதமுதலாக ஆகமங்களும் மனுவிக்கியானமென்னும் நீதிசாஸ்திரமுங் கற்றுணர்ந்தும் மெதுவாக அடிபெயர்த்துவைத்து நடக்கும் யானையேற்றம், குதிரையேற்றம், தேரோற்றம் இவைகளையெல்லாங் கற்றுணர்ந்தும் தனுமுதலாகிய ஆயுதப்பயிர்ச்சியும், மனங்களிக்கக் கறறுணர்ந்து ஒருவனைவிட்டொருவன் பிரியாமல் உடலுமுயிரும்போல்யிருக்குங்காலையில்.

தக்கமறையோர்தழன்மாட்டவி சொரிந்து
மிக்கசடங்கியற்ற நாயகன்விளைவோடுந்
தொக்கவிரவலர்பாத பொன்னமழை பொழிய
வொக்கவிருவோருமுன்னூலுவந்தணிந்தார்.

இங்ஙனம் தகுதியுள்ள பூசுரர்கள் ஓமாக்கினியிடத்தில் அவிர்ப்பாகங்கொடுத்துச் சடங்குகள் செய்ய வணிகேசன் வந்திருக்கிற இரவலர்களுக்கு மழைபெய்வதுபோல திரவியங்கொடுக்கவும் அந்த இரண்டு புத்திரர்களுமேககாலத்தில் உபநயனஞ் செய்துகொண்டார்கள். அங்ஙனம் ஞானசாஸ்திர முதலாகிய பலகலைகளை விருப்பத்துடனருள் செய்த தேவகுருணியொத்த ஆசாரியர் மகிழும்படி காணிக்கையாக ரத்தினங்களும், பொன்னுமகிழ்ந்து கொடுத்துப பதினறுவயதுள்ளவர்களானர்கள். அதாவது கண்டமாதர்களை கூட்டங்கொண்டு நெருங்கிய புருவமாகியவில்லை வளைத்து வாள்போன்ற கண்களே கொடிய பாணமாக எய்யக்குறித்து இராஜபுத்திரனுடைய மார்பினிடத்தில் ஏவும்படியான பருவமடைந்த நாளில் நீங்கியயுயிரைமுன்னங்கொடுத்த சிவயோகியானவர் நீண்ட சடையானது பிடரியினிடத்து புரண்டசையும்படிவர நேரிற்கண்டு அந்த இராஜஸ்திரியும் மனதில் மிகுந்த கிருபையுள்ள அவள் புத்திரனுகிய பத்திராயுவும் பரிசுத்தரான சிவயோகியின் பாதத்தில் வணங்கி மாட்சிமைதங்கிய அம்முனிவர் மனமகிழ்ச்சியடையத்தக்கதாக அன்புள்ளவர்களாய் நல்லமலர்கடுவி பார்வைக்குயினிய மதுரமுள்ள பால் தேன் பழங்கள் பொற்கலத்தில்வைத்து ஆராதனைசெய்து அமுதுகொள்ளச்செய்தார்கள். அங்ஙனம் வளைவாகத் தொங்குகின்ற சடையையுடைய சிவயோகியானவர் தம்மைவணங்கிய அவ்விருவருக்குமாசிர்வசனஞ் சொல்லி சுகமாயிருக்கின்றீர்களாயென வினவி, தாவிச்செல்கின்ற குதிரைகட்டிய தேரினையுடைய இராஜபுத்திரன் முகத்தைப்பார்த்து யாவரும் விரும்புகின்ற அறுபத்துநான்கு கலைகளும் கற்றுக்கொண்டனையா, ஆசாரியனைக் கடவுளாகப்பாவனைசெய்து அவர்மனது சந்தோஷிக்கும்படி செய்தனையா, பகைவர்மேல்ச் செலுத்தும்படியான வேலையுடைய புத்திரனே எம்மையுமெப்போதாவது நினைத்திருப்பையா, சொல்லென்று முனிவர் சொல்லியவார்

த்தையை இராஜஸ்திரிகேட்டு அவர்பாதத்தை வணங்கி சுவாமிஇவ்வுலகத்தில் மறித்தவர்களைக்கொண்டுபோய்ப் போடுவதுபோல்முன்னிறந்திருந்த எனதுபுத்திரனை புற்கள்நிறைந்தசுடலையிற்பபோட்டுவிடாமற்படிக்கு உயிர் கொடுத்தவல்லவரோயும்மையும் நாங்கள் மறந்திருக்கவல்லமா, இப்பெரிய வுலகில் பிறந்தவுயிரைத் தேவரீர் கொடுக்கப்பிழைத்திருக்கும் எனது புத்திரனைச்சீஷனாகக் கொண்டு இத்தன்மையதென்று எளிதிலறியக்கூடாத செங்கோல் செலுத்தும்அரசர்களுக்குரிய நீதிகளைச் சொல்லி ஆணவம் மேலிடாதவண்ணம் ஞானமும் அருள்செய்யுமெனப் பிரார்த்தித்தஇராஜஸ்திரியின் புத்திரனை நோக்கி பூங்கொத்துகள் மலர்ந்திருக்குமாலையணிந்த குமரனே யாமுரைப்பதைக் கேளெனமனுவிக்கியானேஸ்திரத்தை அருளிச்செய்தனர்.

வேந்தன்முறை திறம்பின் வேதவிதி திறம்பு
மேந்திழையார்தங் கற்புமில்லறமு நில்லாவா
மாந்கர் பசியாலுணங்க மழைவறந்து
பாந்தண்முடி கிடந்த பாரின் விளைவஃகுமால்.

அஃதாவது அரசன் நீதிதவறினல் வேதவிதிகள் தவறும், மாதர்களுடைய கற்பும் இல்லறமுமாறிப்போம், மனிதர்கள் பசியால் வருந்தும்படி மழை பெய்யாமல் ஆதிசேடன் முடியிலிருக்கும் பூமியினிடத்தில் பயிர்விளைவுக்குறைந்துவிடும். அப்படிக்கில்லாமல் அக்கினிதேவனுக்கு அவிர்ப்பாகங்கொடுத்துத் தாங்களாகாரங்கொள்ளுகின்ற அந்தணர்கள். பசுக்கள் நோயைத்தருகின்ற உடலைவெறுத்துத் தவஞ்செய்கின்ற முனிவர்கள் பசிய மூங்கிலையொத்த தோளையுடைய ஸ்திரிகள் விருத்தர்கள் இவர்களைத்தாயானவள் சிறுபிள்ளைகளையூட்டிவளர்ப்பதுபோல் வெற்றிமாலையணிந்த அரசன் காப்பனதுவுமன்றி அரசரானவர்கள் தேவர்கள் நிலைமையைக்கடவார்கள். பெரியோர்களிடத்துக் குற்றஞ்செய்யார்கள். நாவினலிரண்டு சொல்லார்கள் நன்றல்லாத காரியங்களைச் செய்யார்கள். காவலின் முறைமைமாறார்கள். காமச்செய்கையதிகப்படுத்தார்கள் வேடர்களைப்போல் வேட்டைத்தொழில் செய்யார்கள், பாபத்தைத்தரு

றென்ற சூதாடலை நினையார்கள், மதுபானஞ் செய்யார்கள், பெரியோரைக்காப்பார்கள், ஒருவர் செய்த உதவியை மறவார்கள், திருடனைக்கோபிப்பார்கள், பழிசெய்யார்கள், தாக்ஷணியம் பாரார்கள், இரப்பவர்களுக்குக் கொடுப்பார்கள். பகைவர் நேரிட்ட சண்டையில் தங்களுயிரைப்பெரிதாக யெண்ணார்கள், உதயகாலத்தில் நித்திரைதெளிந்து யெழுந்து பரிசுத்தமுள்ள நீரில் ஸ்நானஞ் செய்து ஆகமவிதிப்படி பரமசிவனைப்பணிந்து தெய்வத்தன்மையுள்ள வேதியர்களுக்குப்பசுக்களும் திரவியமும் தெளிவாகிய நீர்நிறைவினை நிலங்களும் தானமாகக்கொடுத்துபரமசிவனுடைய அடியார்களுக்கும் முனிவர்களுக்குமதிதிகளுக்கும் கையிற் பற்றிக்கொள்ளத்தக்க வாசனையுள்ள நெய் மதுரமுள்ள பருப்பு ஆவின்பால் வெல்லக்கட்டி முப்பழங்களிவைகளுடனும், வாசனைதங்கிய நல்ல பொரியலுடன் அன்னம் உண்பித்து வந்திருக்கிற விருந்தாளிகளுடன் தாமுமுண்டு பச்சைக் கர்ப்பூர முதலாகிய வாசனையுடன் தாம்பூலந் தரித்துக்கொண்டும் வாசனையுள்ள கூட்டுவர்க்கஞ்சேர்ந்த சந்தனக்குழம்பு யோசனைதூரம் பரிமளிக்குமபடி பூசிக்கொண்டும், மகுடமுதலாகிய நல்லஆபரணங்களணிந்து கொண்டும் மூக்கிற்குழையில் அடைக்கததக்கதாக பாலின்புகையையொத்து அதிகமெல்லிய வஸ்திரத்தை யிடையிற்றரித்துக்கொண்டும் தேவர்கள் தன்னைச்சூழ்ந்துகொண்டிருக்கும்படி தெய்வேந்திரன் வீற்றிருக்குஞ் சபையைப்போல் கிடைப்பதற்கரிய ரத்தினங்கள் பதித்த மிகுந்தபலமுள்ள சிம்மாசனத்தில் வீற்றிருந்து பகைவர்கள் வந்து தாங்கள் கட்டுகிற திறையையளந்துகொடுக்கவும், அரண்மனை முகப்பில் மேகம்போலப் பேரிகை முழங்கவும், இராஜகுமாரர்களும், ஒளிதங்கிய வேலையுடைய மண்டலாதிபரும், சேனாதிபதிகளும் வணங்கவும் நீதியும் தூதர்களுமே தமக்குக்கண்களாக இவ்வுலகில் பாபத்தையொழித்தும், பிராமணர்கள் தேவர்கள், மெலிவடைந்தவர்கள், வருமையாளர் இவர்கள் வருத்தம்நீங்கும்படி குறைபாட்டை வினவியும், சொல்லுதற்கரிய குடிகளும், அழியாத நீதியுமதிகரிக்கும்படியான தந்திரத்தையுமதற்கேற்ற முயற்சையையுமாலோசித்தும் பகற்பொழுதில் தர்மசாஸ்திரங்களையாராய்ந்தும், தம்மையடைந்தவர்களைக் காப்பாற்றியும், பிரகாசிக்கும்பொன்னாபரணமணிந்தநடனப்பெண்களாடுங்கேளிக்கையைப்

பார்த்தும், வீணைவாசிப்பவர்கள் இனியஇசையைக்கேட்டும், இராப் பொழுதில் மன்மதனுக்குத் திருவிழாச் செய்வதுபோல் தங்களுக் குரியமனைவியரிடத்தில் கலவித்தொழில் புரிந்தும் பொழுதுபோககி இத்தன்மையதாகப் பூமியைக்காத்த அனேகமாசர்கள் ஒரு குடை யின்கீழ் உலகமுழுவதையும் ஆண்டு பொன்னுலகமாகிய சுவர்க்கத் தையாழ்வதற்காக யாகங்கள் செய்து நிறைவேற்றி யிவ்வுருவத்தை யொழித்து தேவர்களாய் வானுலகத்தில் சித்திரவிமானமேறிச்செ ன்று ரம்பாஸ்திரிகளுடனிருக்கின்றார்கள். புத்திரனே மேற்சொ ல்லிய பிரகாரம் நீயுமனங்கொண்டு நடந்து பரமசிவனுடைய திரு வடித்தாமரையே துணையாகச் சமுத்திரஞ் சூழ்ந்த பூலோகமுழுவ தையும் ஒப்பில்லாததாய்க் குளிர்ச்சிதங்கியசந்திரவட்டக்குடையின் கீழ் ஆளுவாயாக, அன்றியுங் கொடிய வினைகளை நீக்கத்தக்கதான சிவகவசமும் உனக்கு யாம் சொல்லுகிறோம். அச்சிவக்வசமானது உன்னைக்கூடியிராத பகைகளை அறுக்கும், வெற்றியைக்கொடுக்கும் பாவங்களை நீக்கிவிடுமென்று முனிவரருளி சிவகவசத்தை யிருபத் திரெண்டு கவிகளாக உரைத்துப்பின்னும் யுத்தமுகத்தில் மிகுந்த பராக்கிரமஞ் செய்யத்தக்க வடிவாளும், பகைவரைச் செயங்கொள் ளுகின்ற சங்கமும் விருப்பத்துடன் கொடுத்து தெய்வத்தன்மையு ள்ள விபூதியை அவன் சரீரத்தில் அழகுபெறத்தரித்து பன்னீராயி ரம் யானைப்பலமுங் கொடுத்து நீ நெடுங்காலந்தீர்க்காயுவுள்ளவனாய் வாழக்கடவையென்று நன்றாக ஆசீர்வதித்துச் சென்றனர். இக் கதையைவாசிக்கின்றயெனதுநணபர்களே நம்பரமபதியாகிய சிவபெ ருமானின் திருத்தொண்டர்களின் மகிமையையும் கிருபாநோக்கத் தையும் நன்குணர்ந்து சீக்கரம் உய்திபெறும்பொருட்டு நாடுவீர் களாக.

வணிழு மைந்தனுமன்னவன் சிறுவனுவளர்நாட்
பிணியினண் பொரீயிமனையோடு மதலையைப்பிரித்த
வணிகொள் வச்சிரவாகுவின்குலப்பகையான
திணிதடம்புயனளப்பருஞ்செறி கடற்படையோன்

அப்புரம்வணிகனுடைய புத்திரனும் இராஜபுத்திரனும்வளரு

ம்நாளில் தன்மனைவிக்கும் புத்திரனுக்குங்கண்டிருந்த வியாதியினலை
வர்களிடத்தில் விருப்பம் நீங்கிக்காட்டுக் கனுப்பிவிட்டவச்சிரவாகு
வென்னு மரசனுக்கு மூலப்பகையாகிய மிகுந்தபுஜபலமுள்ளவனும்
அளவிடுவதற்கரிய சேனைச்சமுத்திரத்தையுடைய வனுமானவன் பதி
னாயிரம் சேமத்தேர்கள் சூழ்ந்துவரும்படி புறப்பட்டுப்போய் அழ
கும்பலமுமுள்ளவில்லேந்தியயேமத்தேரினன் னென்னும்பேருள்ள
மகத்தேசாதிபதியானவன் மாலையணிந்த தோளையுடைய வச்சிர
வாகுவினது தசானனமென்னும் பதியையபகரித்துக் கொள்ளயெ
ண்ணங்கொண்டு மார்க்கங்கள் தோறுமிருந்து வழிநடக்குந்தேசத்
தாரையடித்துப் பறித்தும் தாவிக்குதித்துச் செல்லுங்கன்றுகள் து
ன்பமுறும்படி பசுமந்தைகளை யபகரித்தும் ஊர்களையெல்லாந் தண
லூற்கொளுத்தி விட்டும குளிர்ச்சியும் வெண்மைநிறமுள்ள சந்திர
மண்டலத்தையளாவுகின்ற மதிலைவளைந்துகொண்டான். அதை
க்கேட்டுவச்சிரவாகு வென்னுமரசன் கோபங்கொண்டுயுத்தஞ்செய்
யவிருப்பமுற்று விருப்புடன்பொருந்தும் நம்முடையயிரண்டுதோள்
களும் துணையாயிருக்கின்றன பராக்கிரமமுமுண்டாயிருக் கின்றது
பருந்துகள் கண்டுவந்து மேலேசூழத்தக்க கூர்மையுள்ளவேலாயுத
முண்டாயிருக்கின்றது நமக்குபகைஞருமுளதோ வெனப்புகன்று
நல்லரதமேறினன் அதற்கு முன்னேவெற்றி யுள்ளபடைகளும் வந்
துசூழ்ந்தன அழியாதவெற்றியையுடைய அரசர்களாகிய எதிர்த்த
பகைவருடைய சேனைவகுப்பெல்லாமடியும் படிதேவர்களுங்கண்டு
ஆச்சரியப்படபோர்புரிந்தனன்மிகுந்தபலம்பொருந்தியவேலாயுதத்
தையுடைய வச்சிரவாகுசெய்த கொடிதானயுத்தஸ்திரத்தைக்கண்டு
மனம்பொறுமல் தன்னிருகண்களிலும் தீப்பொறிபொங்க வண்டுகள்
பொருந்திய மாலையணிந்திருக்கும் யெமரதனென்னும் வெற்றியுள்ள
அரசனைவன் பகைவருடைய உடலில்புண்செய்யத்தக்க வேலையுட
யவச்சிரவாகுவின் போர்களம் அஞ்சும்படியுத்தஞ்செய்தான். அவ்
விருமன்னருப்பகையுடன் கோபங்கொண்டு சிறிக்கண்கள்தணலா
ல்ச்சிவந்து வில்லினாணில்வைத்து ஒவ்வொரு தரத்திற்குநூறுநூறு
கப்பாணங்கள் விட்டுகணப்பொழுதில் தாங்களேறிக் கொண்டிருக்கி
றதேர்கள்ஒன்றோடொன்று முட்டிவிட்டுபோர்செய்தார்களிவ்வாறு

செய்கின்றயுத்தத்தின்திரமையை அதிகாரத்திலிருக்குந்தேவர்களு
ங்கண்டதிசயித்தனர். இவ்வகையாக அவர்கள்கொடியபோர்செய்யும்
போது கொத்தாகிய பூமாலையணிந்தமார்பையுடைய எமரதபுத்தி
ரர்கள் முத்துமாலைபணிந்த மார்பையுடைய வச்சிரவாகுவின்சேனை
களையெல்லாம் அம்புகளேவிக்கொன்று பிணமலையாகக்குவித்து
கோர்பந்தணியாதவர்களாய் கடிவாளம் பூட்டிய குதிரைகட்டிய பல
முள்ளதேரையுடைய தசானனன்பதியினரசனாகிய வச்சிரவாகுவை
தன் தகப்பன் தேர் தட்டில்ப்போட்டு ஒருநாளுந்தீராதிருந்தபகை
யை யின்றொழித்தோமென்று தங்கள் புஜபலத்தை வியந்து ஜயபே
ரியடிக்கச் செய்தனர். யானைகள். தேர்கள். குதிரைகள் யென்னு
ஞ்சேனைத்துகையை தங்கள்வசப்படுத்திக்கொண்டு பல்காதவரையில்
தோன்றுகின்ற உன்னிதமான அழியாத மதில்களையிடித்து குளிர்
சிதருகின்ற சோலையையும் நகரத்தையுமக்கினிக்காகாரமாகக்கொடு
த்துப் பின்னுங் குரோதங்கொண்ட மனத்தர்களாய் அரண்மனையி
லுள்ள பொருள்களையெல்லாங் கொள்ளையிட்டனாகள். அதன்பின்
மோக்ஷவீட்டினை அடைதற்கு விருப்பமுள்ள ஞானவான்களைப்போ
ல அதிகச்சந்தோஷத்தையடைபவர்களாய் தங்கள் சிறப்புள்ள தேச
த்துக்குச்சென்றனர்.

தாம்மணித்தோள் விடபன்றந்த சுடர்வாளு ம்
மேமமுறு வெண்சங்கு மேந்தி நெடுவீதியின்வா ய்
காமனுருவாய்ந்தனைய காளையிளந்தோழனொடு ங்
கோமகனு நின்றான் பதிகரிது கூறுவார். 1.

மாவியலுந் திண்டேர் மகதர் கோன் வாளமரி ற்
கோவியலுமாற்றிக் கொடிநகருந் தீக்கொளு வி
யேவியலுந் திண்சிலையான் வச்சிரவாகென்னுமொ ரு
சேவகனைச்சேர்த்துக் கொடுபதியிற் செல்கின்றான் 2.

மன்னனமூதாற்றல் கேட்டு மதிமயங் கி
யின்னமேலோடும் போகின்றோ மென்றானொனுங்கடுஞ்சொற்
கன்னமுறநாராசங்காய்ச்சிச் சொருகிய போ ற்
பொன்னமருந் தோள்விடலை கேட்டுப்புகைந்து சொன்னான்

அவ்வாறாய பின்னர் விடபனென்னும் சிவயோகி கொடுத்த ஒளியுள்ள வாளாயுதத்தையு மின்பந்தரத்தக்க சய சங்கத்தையும் பூமாலையணிகின்ற மேருளிற்றாங்கிக்கொண்டு மன்மதனுருவம்பெற்ற துபோல் அழகுள்ள காளையாகிய இளமைப்பருவமுள்ள தன்றோள னுடன் இராஜகுமாரன் நெடியவீதியினிடத்து நின்றானப்போழ்து வழிநடப்பவர்கள் குதிரைகட்டிய திண்ணியதேரையுடையமகததே சத்தரசன் கொலைசெய்யும் போரில் அரசாக்ஷியை மாத்தி கொடிக ட்டிய பட்டினத்தைக்கொழுத்தி விட்டு பாணங்கள் தொடுக்கும்படி யான வில்லையுடைய வச்சிரவாகுவென்னுமோரரசனைக் கட்டிக்கொ ண்டு தன்னகரத்துக்குப்போகின்றானவ்வரச னழுகிறதைக் கேட்டு மதிமயங்கித் துன்பத்துடன் போகின்றேமெனக்கூறினர். அவ ரவர்களுரைத்த கொடுஞ்சொல் நாராசத்தைக்காச்சிக் காதிற்சொ ருகினதுபோற் கேட்டு வீரலக்ஷிமி குடிகொண்ட தோளையுடைய பத்திராயு கோபங்கொண்டு யெங்கள் குலத்து அரசனுக்கு திறை கொண்டு வந்து கொடுத்து யேவற்பணி செய்கின்ற மேகமண்டல த்தையளாவிய மதில் சூழ்ந்த மகததேசத்தானிப்போது பலம்பெற் றான். இனிச்சிங்கத்தின் வலிகெடச்சிறிய முயலும் வெல்லும், சூரி யன்மழுங்கத்தக்கதாக உலகத்தை மூடும், இருளுங்காயும் நீங்காத செங்கோல் நடாத்தும் வலியுள்ள மகதனுடைய சேனைகளையெல் லாம் வீரசுவர்க்கத்திலச் சேரும்படிக்கிப்போது யெனது வாளாற் றுண்டஞ்செய்யாவிட்டால் பால்போலுமதுரிக்கும் திருமொழியினை யுடைய பார்பதி தேவியார் துதிசெய்யும்படி பதஞ்சலிபகவானுக் காக நடனஞ்செய்யும் பரமசிவனுடைய அடியாறகடியனல்லனாகக் கடவேன் யெனவும், குன்றாத தங்கள் குலத்தின் வெற்றிக்கிப்பழி யுண்டாக்கிய தன் பிதாவின் துன்பத்தை நீக்குந்தகுதியுள்ளவனாக விரைவாக யெழுந்து தன்றோழனோடு சென்று சேனையைப்பார்த்து க்கோபங்கொண்டு வாளையுறையினின்று நீக்கி விறகுகள் சேர்ந்தி ருக்குங் காட்டினை அக்கினிதேவன் யெறிப்பதுபோல்ஒலிக்குங்குதி ரைகட்டியதாய் மந்திரகிரிபோல் உயர்ந்த தேர்களும், மதகரிகளும் பந்தி பந்தியாகிய குதிரைகளும் பூமியில் விழும்படி வெட்டித்தள் இவ்வாறு போர்புரியவே மாறுபடாத வெம்போர்ச்செய் ளினான்

யும் மகதர்கோன் சேனையெல்லாம் மிருகங்களைக்கொன்று காட்டிற் சஞ்சரிக்கும் ஓர் சிம்பம் வந்து கொல்லப்பயந்து மார்க்கமல்லாத மார்க்கத்தில் ஓடிப்போகிற பசுக்கூட்டம்போலாயின. அப்போது தன் சேனைகள் தோற்று வோடிப்போவதை எமரதனென்னுமரசன்பார்த்துப் பயங்கொண்டு யிவனுமோர் யமனேவென்றுசொல்லி தன்னுடைய தேரைத்திருப்பி முதுகுகாட்டியோட யெத்தனித்த அளவில் தையறிந்த நல்ல செந்தாமரைபோன்ற முகத்தையுடைய பத்திராயு வானவன் தன்சங்கத்தை வாயினிடமாகவ்வைத்து நாதமுண்டாக்கிய தொனியைக்கேட்டு ஐயமுற்று மகததேசத்தான் கீழேவிழுந்து மூர்ச்சையடைந்தானவன் சேனையிலுள்ளவர்களுமவ்வாறே மூர்ச்சையடைந்தார்கள். வெற்றிமாலையணிந்த மேற்கூறிய மகததேசத்தானையுமவனுடைய ஆசைபொருந்திய புத்திரர்களையும் காவலாகிய விலங்குபோட்டும் பிதாவின் சிறையை நீக்கியவன் பாதத்தில் வணங்கித் தங்கள் குலத்துக்கு நேரிட்டபழியைத் தீர்த்தான். உயர்ந்த வெண்குடையோனாகிய பத்திராயு இங்ஙனம் சிறையினின்று நீங்கிய தசானனதேசத்தரசன் மிகுந்தஅன்புள்ளவனாய் பத்திராயுவைப்பார்த்து யெங்கள் குலத்தரசர் செய்த தவப்பயன் வந்துஉதவியது போல் வந்து யெனக்கு நேரிட்ட பங்கத்தையும், துயரத்தையும், இழிவையும் நீக்கிய புண்ணியவானே! சிங்கத்தையொத்தவனே! நானுனக்குச்செய்யத்தக்க பிரதி உபகாரமுண்டா—யிருக்குமானால் மழைபெய்து காக்குமேகத்துக்கு இவ்வுலகத்தில் நிலைபெற்றிருக்குமுயிர்களும், கைமாறு செய்யும் மிகுந்த பலமுள்ளவனே உன்னுடைய சுற்றத்தார்யார் உன்னைப் பெற்றவர்கள்யார் நின்னூர்யாது நினது பேர்யாது நீயிங்கேவந்தற்குச் காரணம்யாது மகதனுடைய ஒன்பதக்குரோணிசேனையெல்லம் ஒழிந்து போகும்படி வென்று சினந்து தெள்ளியவாளை விதிர்த்தவீரனே சொல்லென, விலலையுடையமகாராஜனே யெனதுபெயர் பத்திராயு, மற்றவையெல்லாம் பின்னாலேசொல்லுகிறேன் இந்த சுனத னென்பவன் யெனது துணைவன் யிவன் பிதாவாகிய மிகுந்த அன்புள்ள வணிகேசனென்பவர் யெங்களையாதரிக்க வாழ்ந்துகொண்டிருக்கிறோம். யென்றிவ்வாறு சொல்லி பணிந்து மகாராஜாவே இந்தப்பகை மன்னவன் சிறையை. மருபடி

நான் வருகிறவரையில் விடாதேயெனச் சொல்லி தோழனைக் கூட்டிக்கொண்டு தன்னாட்டிற் போய்ச் சேர்ந்தான். தாயானவள் அவர்களைக்கண்டு பொன்னாரமணிந்த மார்பையுடையவர்களே நடந்த சேதியென்ன சொல்லுங்களென பகை கொண்டயுத்த முகத்தில் மகத தேசத்தான் வெற்றியடைந்து விழாக்கள் நடந்து கொண்டிருக்கும் பழமையான தசானனன் யென்னு மூறைக் கொழுத்தி நீறாக்கி யெனது பிதாவை விடாதகாவற்படுத்திக்கொண்டு போனான்றையறிந்து சிறிநாங்கள் போர்புறிந்து வென்று சிறையைமீட்டோமெனச்சொன்னான்.

கேட்டாளரசன் பெருந்தேவி தன்கேள்வனின்னல்
வாட்டாரைக்கண்ணீர் முலைமூன்றில் வரக்கலுழ்ந்தாள்
கோட்டானைவீரர்குலையச் செருச்செய்துமைந்தன்
மீட்டானெனலும் குளிர்ந்தாளறண் வேண்டநின்றாள்.

அவ்வாறுசொல்ல அரசன்மனைவி தன்கணவனுக்குநேரிட்ட துன்பத்தைக் கேட்டு வாளை யொத்த கண்ணீர் தனங்களின்மேல்விழும்படி அழுதாள். உன்மகன்போர்ச் செய்து உன்கணவனை மீட்டானென்று சொன்னவளவிலார்வமுடையவளானாள். தருமதேவதை வேண்டும்படிக்கு நிற்பவள் துணிவுபொருந்திய வச்சிரவாகு வென்னுமரசனை யத்திராயு சிறைமீட்டானென்று பழமையாக மிகுந்தசெல்வமுள்ள வணிகேசன் கேள்வியுற்று இஃது புத்திரன்செயற் பாலதாய்நற்கருமந்தானெனப் புகழ்ந்தனள்.

வேதப்பொருளினடிபேணும் விடபனென்றுஞ்
சீதப்புயலற்றை யிராவினிற் சிந்தையெண்ணி
நீதிப்பயிருக்கற நீர்பெய்நிடதராஜன்
கேளற்ற கேள்விக்குலபூபதி கோயில்சார்ந்தான்

பரமசிவனுடைய திருவடியையே விரும்பிக்கொண்டிருக்குங் குளிர்ச்சியுள்ள மேகம் போன்ற விடபனென்னும் சிவயோகியானவர் அன்றிரவு தமது மனதிலாலோசித்து த மமாகிய பயிருக்கு நீதியா

பெரீர்பாச்சுக்குற்றமற் றகேள்விகளையுடைய நீடததேசத்தரசன சண்மணைக்கிகேனர் அவ்வாறுவந்தசிவயோகிக்கு சீமந்தனியுமவள் கணவனுமனமகிழ்ந்தாரதனை செய்து துதித்து வேதங்களுணர்ந்த தேவரீருடைய திருவடிகள் வருந்திச்சிவக்கும்படி நடந்துவந்தருளியதற்குக்காரணங்கட்டளையிடவேண்டுமெனத்துதித்து நின்றனர்கள். அவர்களைப்பார்த்து அரசனே பெண் பேசவந்தோம், சங்குகள் ஒலிக்கும்படி வயல்களில் வாளை மீன்கள் பரவும்படியான நீர்வளப்பத்துடைய தசானனன் நாட்டிற்கு அரசனாகிய யானைப்படைகளுடன் வச்சிரவாகுவென்னுமரசன் தன் மனைவியை புத்திரனுடன் விபாகுலங்கொண்டு காட்டுக்குப்போகும்படி நீக்கிவிட்டனன். பொலிவுள்ள தனத்தையுடைய அந்த ராஜஸ்திரியானவள் கொடிய காட்டிற்போய் மேகங்கள் வந்து தவழ்கின்ற சோலைசூழ்ந்த ஓர் நகரத்திற்புக்கினளவ்விடத்திலவள் புத்திரனிறந்து போயினன். அவனையாம் பிழைப்பித்து வாளாயுதமுதலானவை கொடுத்து ரட்சித்தோம். அப்படியிருக்க மருமன்னியவரசன் யுத்தஞ்செய்து வென்று அவன் பிதாவைத் தேரிற் கட்டிக்கொண்டு போவதைப்புத்திரன் கேள்விப்பட்டு பிதாவென்கிற அன்புகொண்டு போய் போர்புரிந்து பகைவனைவென்று பிதாவை மீட்டுவிட்டனன். அப்புத்திரனுக்குன் குமாரத்தியாகிய கீர்த்திமாலினியைக்கொடுக்கவேண்டுமென சிவயோகி புகழ்ந்துரைத்தனரதற்கு சந்தராங்கதனென்னுமரசன் மகிழ்வுற்று கோசிகனேயென பெரியோர்கள் கூறத்தக்க தேசிகனே யான் வேறே சொல்லவேண்டுமோ! ரத்தினவடங்கள் பொருந்திய தனங்களுடைய யெனதுபுத்திரியை குற்றமில்லா அவ்வரசன் குமாரனுக்கே கொடுக்கின்றேனென இவ்வாறு உபசாரததுடனறிவித்து சுவாமிகளே ஆசிரமத்துக்கெழுந்தருளலாமென்று அனுப்பிவிட்டுடனே தன்றளகர்த்தரையனுப்பி யவ்வரசபுத்திரனை இவ்விடமழைத்துக்கொண்டு வாருங்களெனவுரைத்தனன். தாவிச்செல்லுங்குதிரைகளுடைய சேனாதிபதிகள்போய் பத்திராயுவைக்கண்டு பணிந்து இராசனே நீ பிதனைக்கேளென்று நடந்த சேதிகளைச்சொல்லவதைக் கேட்ட மதயானைகளுடைய அந்தப்புத்திரன் மகிழ்ச்சியடைந்து தன் தாயும் தங்கள் துன்பத்தை நீக்கி ஆதரித்த வணிகேசனுமவன் புத்திரனும் முன்னே போகும்படி தானவர்கள் பின்னே சேனை

சூழ்ந்துவரப் பிரயாணமாய்ப்போய் வேட்டஞ்செய்து கொள்ளும் பட்டினம் சேர்ந்தான். பாய்ந்து செல்லுங் குதிரைகளுடைய பத்திராயு

சார்ந்த போழ்தினே சந்திராங்கத
னார்ந்த நண்பு கூர்ந்தளவளாவியே
பூந்தண்வார்குழற் பொருவில்கன்னியை
யீய்ந்தனன் மகிழ்ந்திளவற் கென்பவே.

இவ்வாறு பத்திராயு வந்தபோது சந்திராங்கதன் மிகுந்தன்பு கொண்டு அளவளாவிப் பூமாலையணிந்து குளிர்ச்சிதங்கி நீண்ட அளகத்தையுடைய ஒப்பில்லாத தன கன்னிகையை விவாகஞ்செய்து கொடுத்தனன். படமுள்ள சர்ப்ப சயனத்தில் பள்ளிகொண்டிருக்கும் திருமாலும் செந்தாமரைப் பூவில் வீற்றிருக்குந் திருமகளும் போல் உண்டோ யிலலையோவெனச் சந்தேகிக்குமிடையினையுடைய கீர்த்திமாலினியும் பத்திராயுவும் சுவர்க்கலோகம்போன்ற பரிசத்தமுள்ள புட்பசயனத்திற் பொருந்தினர்கள். அங்ஙனம் பத்திராயு குங்குமப்பூச்சேர்ந்த சந்தனக்குழம்பணிந்ததாய் குவிவாயிருக்கும் தன் மனைவி தனத்தினிடத்தில் பொருந்தி யின்பசமுத்திரத்திலாழ்ந்தான். கீர்த்திமாலினியவன் புயத்திலடங்கி யாசைவெள்ளத்திலாழ்ந்தாள். இவ்வாறுயிருவர்களும் பிரியாமல் வாழும் நாளில் சத்துருக்களுடைய உயிரைவாங்கத்தக்க வேலையுடைய நிடதராஜன் அரசர்காசனுகிய வச்சிரவாகுவென்னுமரசனை யிவ்விடத்துக்கழைத்து அவன் மனைவியையும், புத்திரனையுமவனுடன் கூட்டியனுப்புவதே யோசனையென்று சிங்கம்போன்ற ஒப்பற்ற வச்சிரவாகு மகாராஜாவே உம்மைப்பார்க்க வேண்டுமென்று யெனது மனதில் விருப்பமுற்றமையால் நீர் உமது நகர்துறந்து வழிகளைக்கடந்து யான் பார்வையுறும்படி வரவேண்டுமென வோலை வரைந்தனுப்பினன். மத்தளம்போலத் திரண்ட தோளையுடைய நிடதராஜன் தூதர்கள் தசானனன் தேசத்தரசனிடத்திற் போய்ப் பொன்னாற் செய்யப்பட்டு ஒலிக்காநின்ற வீரகண்டையணிந்த காலையுடைய நிடதமகாராஜன் வரவிடுத்த வோலைகொணர்ந்தோமெனச் சொல்லியதைக் காண்பித்தளவிலங்கிருந்த ஓர் கர்ணன் அரசன் குறிப்பறிந்து காண்பித்த

ஓலையை தன்கையில் வாங்கி வாசிக்கும்படி கட்டளையிடவேண்டுமெ
னக்கேட்டு அரசனுத்திரவு கொடுக்கப்பெற்றுக்கொண்டு அவ்வோ
லைவாசிக்கலுற்றனன். மிகுந்த பராக்கிரமமுள்ள மருதேசத்தரசர்
கள் மகுடங்கள்படடுச் சிவந்த வீரகண்டையணிந்த காலையுடைய
வச்சிரவாகு மகாராஜாவே! விடதேசத்தரசனாகிய யாம் உமக்கெழு
தியனுப்பிய வோலையை வாசித்துக்காண்பீராக, யென்னவெனில்
உம்மைக்காணவேண்டுமென யானதிக அபேக்ஷைகொண்டிருக்கின்
றேனாதலாலும்முடைய நகரம விட்டிழிந்து சிறப்புள்ள வெனது
நகரமடைந்து பின்புமது நகரத்துக்கேகுக யென இவ்வண்ணமெ
ழுதி விடதாரசனனுப்பிய ஓலையிலிருந்த வாக்கியங்களைக் கேட்டு
அவ்வரசனுடனட்புக்கொள்ள மேருமலைபோல் வானமுகட்டைய
ளாவும் சிகரத்தையுடைய கிறமுள்ள ரத்தினங்கள் பதித்ததேரைக்
கொண்டுவரச் சொல்லியதின்மேலறிக்கொண்டு ஒளிவிளங்குமாயுதங்க
ளுடைய அரசர்கள் தன்னைச் சூழ்ந்துவரவும், பேரிசொலிக்கவும்,
தவளச்சங்கமாரவாரிக்கவும், பழமையாய் வருகின்ற எதிரிகள் ப
டைநடுங்கவும் விசயமாகினன்யெக்காலத்திலு மாறுபடாத பெருங்
குணத்தையுடைய வச்சிரவாகு மகாராஜன் வருகின்றானெனக்கேழ
விப்பட்ட விடதாரசன் ஆறுயோசனை தூரவளவில் தன்சேனைகள் ப
ரந்திருக்கும்படி யனுப்பி தானும் புறப்பட்டுப் போயவ்வரசனைக்க
ண்டன்புடனளவளாவி யெல்லாச் செல்வத்திலுமுயர்ந்த தான் தன்
னகரத்திற்கு அழைத்துக்கொண்டு போய்சந்தோஷத்துடன் குலைக
ளின் மிகுதியால் கமுகுமரங்கள் தலைவளைந்திருக்கும்படியான நகா
னனன் தேசத்தரசனுக்கு தக்கபடி உபசாரஞ்செய்தனன் அவ்வாறு
செய்தவுபசாரங்களை யெல்லாம் மிகுந்தவொளியுள்ள வேலையுடைய
வச்சிரவாகுவென்னு மரசன்பார்வையுற்றுச் சந்தோஷித்து பூலோ
கத்திலிவனைப்போல் நம்மிடத்தில் நட்புள்ளவர்கள் வேறொருவருமி
ல்லையெனப்புகழ்ச்சி செய்யும் போது குதிரையேறப் பொருந்துவ
தில் வல்லவனும்பலசாஸ்திரங்களையுணர்ந்தவனுமாகிய பத்திராயு
வந்து அன்புடன் தன்தகப்பன் பாதத்திற்பணிந்து அவனுக்குச் சமீ
பமாகநின்றான். உடனே வச்சிரவாகுவென்னுமடல்வேந்தனவன்
களித்து நோக்கித் திண்டிறலாய் வடிவாட்கைச்சேவகனே, யெனது
சமீபத்தில்வா, சமீபத்தில்வாவெனச்சொல்லி வண்டுகள் பொருந்

திய மாலைபணிந்த நிடதராஜன் வதனத்தை நோக்கி யிப்பிள்ளைகொ
டியவனாகிய மகததேசத்தன் பலத்தையுமவன்சேனையின் யினுமாப்
பையுமழித்து யென்னைக் காத்துயிர் கொடுத்தபுண்ணியவானெனவு
ரைத்து இப்பிள்ளையை அரியதவப்பயன்போலப் பெற்றவன்யாவன்
இவனிருக்கும்பதியெது. மாபென்ன யெனக்குதவி செய்யும்படி வர்
த காரணமியாது, ஜயலக்ஷிமிவாசயாயிருக்கும் புயத்தையுடையவா
சனை உன்மருகனுடைய வரலாறெல்லாம் யெனக்கு விபரமாகச்சொ
ல்லவேண்டு மெனக்கேட்ட நிடததேசத்தரசன் நகைத்து சந்திரனை
ப்போல்விளங்கு முத்துமாலையலங்கரித்த வெண்குடையுடையராஜ
னே, நானோர்கதைசொல்லுகிறேனதைநீகேள் மேகங்கள் காலந்தப்பா
மல் மழைபொழிகின்ற வளப்பந்தங்கிய வோர்நகரமுண்டு யதையா
ளுகின்ற அரசனொருவனுண்டு அவன்பழியையெண்ணாது தன்மனை
வியையும் புத்திரனையும் காட்டகம் நீக்கிவிட்டான். சங்கக்குழைய
ணிந்த பரமசிவனுடையகிருபையினால் ஓர்வணிகனவர்களைக்காப்பாற்
றினன் உத்தமகுலத்தனாகிய அந்தவணிகன் ஆதரிக்குநாளில் புத்திர
னிறந்துவிட்டான், அத்துயரத்தினால் வில்லையொத்தபுருவத்தையு
டைய ராஜஸ்திரியழுதுகொண்டிருந்தனளப்போது அவ்விடத்தில்
வந்த ஓர்சிவயோகியவளழுவதைக்கண்டு மனமிறங்கி வருந்தாமலிரு
க்கும்படி இறந்தவனுயிரைக்கொடுத்தெழுப்பியதன்பின்பு அப்பு
த்திரனுக்கு, ராஜநீதிபோதிப்பித்து மாறுதமிகுந்தபலமும், வாளும்
சங்கமுங்கொடுத்து, துயரத்தைநீக்கினர், இவ்வாறு சிவயோகியரு
ளினால ராஜபுத்திரன் நாளுக்குநாள் பலமதிகரிக்கதிரண்டகல்லைப்
போல் பருத்ததோளையுடையகாளைப்பருவமாய், இளமையும் சௌ
ந்திரியமுமிகுதிபாகுங்காலத்தில் பகைவர்வந்து போர்புரிந்து ஜயம்
பெற்றுத்தன்தகப்பனைச் சிறைப்படுத்திக்கொண்டு போகக்கேள்வி
யுற்று அழகியசிங்கத்தையொத்த அப்புத்திரனவ்விடத்திற்போயவர்
களைவென்று, சிறைப்படுத்தி தன்பிதாவைசிறையினின்று நீக்கிவிட்
டான். இக்கதை போல்நீயொருசரிதை கேழ்வியுண்டாயிருந்தால்
சொல்லெனச்சொல்விளங்குகின்ற தகுதியுள்ள, பெரும்புகழ்பெற்
றமகாராஜனையப்போதுயான் சொல்லியகதைக்குறியவர்களையும்
சொல்லக்கேழ்ப்பாயாகசெந்தாமரைமலர்போன்றசெவ்வாயையுடைய
அப்புத்திரனுமிந்தப்புதல்வன்தான் பிதாநீதான் கற்பினாற்சிறந்த

ஈாயானவளுன் மனைவிதானென்று சொல்லக்கேட்டவரசன் அறிவு மயக்கித்தி ழேவிழுந்துவிட்டனன். விழுந்தஅவ்வரசனை யெடுத்து வியர்வைமாற்றி முகந்துடைத்து மூர்ச்சைநீக்கி என்னையனே பெங்களைப்பற்றியவினைசெய்ததுன்பததை நாங்களனு பவித்தோமதற்காக நீவருந்தவேண்டியதில்லை யெனமனதைத்தெளிவித்து யெழுந்திருவெனச் சொல்ல யெழுந்தவ்வரசன் தான்செய்தகுற்றம் தன்மனதைப்பிளந்து அறிவைக்கலக்கிவிட ஒன்றுந்தோன்றுமலிருந்து பின்புதேரி மகனையளைத்துக் கொண்டுகொடுமையாகிய காட்டி னுங்களைவிட்டு வரும்படி வுத்திரவு செய்தவலியநெஞ்சையுடைய கொடும்பாவியாகிய யென்னை மகததேசத்தான்கொல்லாமலுயிர்கொடுத்த புத்திரனே இப்போதுயானஞ்சாமலுயிரோடுயிர் பொருந்தும்படி புல்லிக்கொள்ளவும் கிருபைசெய்தாய் இதையறிந்த வுலகத்தாரென்னை நமனென்று சொல்வார்களே யல்லது அரசனென்று சொல்லமாட்டுவார்களா ஐயையோ தர்மநெறியை யெண்ணுமல் மனைவியை புத்திரனைக்காட்டிடனித்திலனுப்பி விட்ட நானுமரசனு, புலைபர் செய்யுந்தொளிலுள்ளவனுயிருந்தேனே யாதலாலினி இவ் வாழ்க்கை நீங்கிவிடுவதே தர்மமென்று துணிவுகொண்டுயெழுந்த தசானனன்தேசத்து அரசன் அங்கிருந்த மந்திரிகளும் ஒளிதங்கிய வேலாயுதத்தையுடைய நிடததேத்தரசனும் சமாதானஞ்சொன்னதினல், துன்பஞ்சற்றுநீங்கிச் சிறிதுநாளவ்விடமிருந்து அவ்வரசன் சினேகமிருதியாகப்பெற்றுக்கொண்டு பின்புசிங்காசத்தில தமணிந்த முகத்தை தயுடையதன்மனைவியுடன் செம்பொன் மயமாய்ப் பெரியகொடி கட்டப்பட்டதேறிலேறிக்கொண்டு தன்புத்திரனுகிய பத்திராயுவும்மருமகாளாகியகீர்த்திமாலினியும்பின்னே வரகொத்தாகிய மலரையுடையகதடும்பதிகளுநுயர்ந்த மலைகளும் நீங்கித்தன்னகரத்திற்போய்ச்சேர்ந்தனன். அந்நகரத்தில் வாழ்கின்றவர்கள் பத்திராயுவைப்பார்த்து வாசனைதங்கிய மலர்கள்தூவித்துதிசெய்வார்கள் சிலர் புலர் முகயானைப்படையையுடைய அரசனே ஊழிகாலவரையில் இவ்வுலகத்தைகாத்துயெம்மைரக்ஷிக்கக்கடனியென்று சொல்வார்கள் சிலர் பத்திராயுமகாவிஷ்ணுவே, மயிர்ச்சாந்தணிந்தநீண்ட குழலையுடையஇவன் மனைவியாகாலக்ஷிமியென்டார்கள் சிலர் நாய்வாழூாளாகிய நம்முடைய

ஆயிசு இந்தப் புத்திரனுக்கேயாகக் கடவதென்று வாழ்த்துவார்கள் சத்துருக்கள் பயப்படத்தக்கதாக போர்செய்து பிதாவுக்கு நேரிட்ட மனவருத்தத்தை நீக்கிய புயத்தைப்பாருங்களென்பார்கள் சிலர் சமுத்திரஞ்சூழ்ந்தவுலகமெல்லாமிவன்காலின்கீழே தங்குமென்பார்கள் சிலர் பகைதருவதாகிய வேலாயுதத்தையுடைய இவனரசாக்ஷிபெற்றுக்கொண்டு இவ்விடத்தில் வர நாமுண்மையான தபஞ்செய்தோமென்பார்கள் சிலர் மகதராசன் விலங்கிலகப்பட்டுக் கொள்ளும்படி வெற்றிகொண்டகூரியவாளிதுதான் பாருங்களென்பார்கள் இவ்வாறு சொல்லுகிற நகர்சனங்களின்பம்பொருந்தத்தக்கதாகத்தன் புத்திரனுடன்போய் வச்சிரவாகுமகாராஜன் மகாமேருவையொத்தவன் அவன்மனையிலிருந்து ஒருகுடைநிழலில் பூமியைக்காத்து நெடிது நாட்சென்றபின்பு மகதராசனைச்சிறை நீக்கி யினி நீதிறைகட்டிருவெனச் சொல்லியனுப்பிவிட்டபினிந்தத்தேகத்தை விட்டுநீக்கிசுவர்க்கபதம் பெற்றான் பத்திராயு அரசுசெய்து கொண்டிருந்தனன். இதைவாசித்தறியுமெனது நண்பர்களே! இச்சரிதையிலுலாவுகின்ற சிவயோகியின்கருணையை யெவ்வாறுரைக்ககூடுமென்பதையுணர்ந்து அம்முனிவரைப் போன்ற மகான்களையடுத்து நன்மார்க்கம் பெறுவீர்களாக.

கன்னவிறிரண்டோன் முத்தக்கதிர் மணிக்கவிகைச்செங்கோன்
மன்னனவமைச்சரோடு மலிகடற்றானையோடும்
பொன்னணித்திகிரிமன்னு புரவியந்தேர்மேற்கொண்டு
மன்னிடைத்துணைவியோடு விரைமலர்க்கானம்புக்கான்.

மலைக்கொப்பாகச்சொல்லுகின்றதிரண்டவடிவாயிருக்கும்தோள்களையும்முத்துக்களாலலங்கரித்த குடையிணையுமுடையவனாய்ச்செங்கோல்நடாத்தும்பத்திராயுவென்னுமரசன்மந்திரிகளுமிகுதியாயுள்ளசேனையுஞ் சூழ்ந்துவரப்பொன்னாற்செய்யப்பட்ட உருளைபூண்டதேரில தானுந்தன்மனைவியுமாகஏறிக்கொண்டுவாசனையுள்ளகானகஞ்சென்றனன் அவ்வனத்திலிருக்கும் சண்பகம் பலா கமுகு சந்தனம்தேமா பச்சிலைஅண்டமுகடுபிளக்கும்படிஉயர்ந்திருக்கும் கோங்கு விளா மந்தாரம்யென்னுமவிருக்ஷங்களால் பார்ப்பவர்கள்பார்வைநுழைவதற்கு இடமில்லாமல் நெருங்கப்பட்டுஒருகாததூரமட்டும்வாசனைபரிமளிக்கு

ஞ்சோலையானது இசைபாடும்வண்டும் தேனென்கிற சுரும்புகளும்
மின்னைகளும் வாசமாயிருக்கத்தக்க வனத்தில் தானும் தன்மனைவி
கீர்த்திமாலினியென்பவளுடன் வழிவந்தஇளைப்பு நீங்கியிருக்கும்
பொழுது ஓர்வேதியன் தன்பத்தினியாகிய கோவைப்பழத்தையொத்
த செவ்வாயினையுடைய மாதுடன் றுயரமுள்ளவனாய் முறையிட்டுக்
கொண்டு தர்மத்துடனுலகத்தைக்காக்குமரசனே, அரசர்களாகிய
யானைகளுக்கு சிம்மம்போலிருப்பவனே, கொடிதான ஓர்புலி யெங்
களைக்கொல்லத்தொடர்ந்து வருகின்றது அதனை யுன்கையிலிருக்கும்
வலியபாணத்தை யேவியவ்விடத்திலே விழுந்துசாகும்படி கொன்று
நாங்களிறப்பதை நீக்கியெங்கள் பிராணனைக் கொடுத்துக்காப்பாற்ற
வேண்டுமெனச்சொல்லியவார்த்தையானது வந்துவொலிக்கும் வீர
கண்டைகாலிற்கட்டிய அவ்வரசன் காதில்கேட்டவுடன் பிறைபோல்
வளைந்த பெரியவில்லையும் பாணத்தையும் கையிலேந்தி கோபங்கொ
ண்டுவருகிற வெய்யபுலியை விரைவினிற் கொல்வதற்கு யெத்தனப்
பட்டுவருவதற்குமுன் தொடர்ந்து புலியானது அப்பிராமணத்தி
யையடித்துப் பிடித்துக்கொள்ளவே அழுகிறவந்தப்பிராமணஸ்திரி
யானவள் அரசன்முகம் நோக்கி யரசனே யான்புலிவாயிலகப்பட்டுக்
கொண்டனன் யெனதுயிரைக்காப்பது உனதுபாரமென்று சொல்லி
மின்னலைப் போல்விளங்குஞ் செஞ்சடையுடைய உண்மைப்பொரு
ளாகிய சிவநாமத்தையுச்சரித்தாள். பிராணன்நீங்கிவிட்டது இதுபா
வமானகாரியம் அப்பிராமணன் சொல்லிய சொல்லால் மகத்தாகிய
துயரங்கொண்ட அவ்வரசன் கோபமுள்ளவனாய்க் கொல்லும்படிவி
டுத்த பாணமானது போய்ப் புலியின்மேல! பூவைப்போல்விழுந்தது
அதைக்கண்டு உண்டான பொறுமையானது மனதை வருத்தமிகுந்த
பலமுள்ளவேலேந்துமவ்வரசனுக்கு ஒன்றுந்தோன்றாமல் திகைத்து
நிற்புழி புலியானது தன்னாற்கொலலப்படவளை யுண்ணக்கவ்விக்கொ
ண்டுமலைகுகையைநாடிச்சென்றது வுடனே யவ்வரசனாகிய பத்திர
யுதயாமுற வேதசாஸ்திரங்களுணர்ந்த வேதியனானவன் யெனது
மனைவியை யிவ்வுலகத்திலிழந்துவிட்டேனே பதிவிரதா தர்மத்தில் அ
ருந்ததியும் நிகராகாத மனைவியே ஐய்யயோ பெரும்புலியின்பிளப்பா
கியவாயிலகப்பட்டுக்கொள்ளும்படி முன்ஜன்மத்திற்செய்தவினையுண்
டோ தென்னங்குரும்பையை யொத்த தனங்களும் முத்துக்களையொ

த்த தந்தங்களும் பூங்கொடியையொத்த இடையினையுமுடையவளே
நீயிறந்தகொடுமையைக்கண்டு மிரும்பையொத்த வன்னெஞ்சங்கொ
ண்டின்னமுநானிறவாமலிருக்கின்றேனே யென்று பலபலவாகத்தன்
மனைவியின் குணாதிசயங்களை யெடுத்தழைத்துச் சொல்லித்துன்பத்
தில் மனது அழுந்திடக் கன்றிளந்த பசுவைப்போல் பெருமூச்சு
விட்டுக்கவலையுடன் சோர்ந்து இப்போது ஒருகாரியஞ்செய்யத்துணி
வேனென்று தன்மனதில் நிக்ஷயித்துக்கொண்டெழுந்து நின்று மலை
யொத்ததிரண்டபுயத்தையுடைய பத்திராயுவாகிய அரசன்மேல்கோ
பமுற்று அந்தணர்களுக்குத்துன்பமுற்ற விடத்தில் உதவிசெய்யாத
மன்னவர்கள் சிங்கமேஉதிரம்பொருந்தியிருக்கும் பொல்லாதவாயும்
வெவ்வியதீப்பொறியைக்கக்கும்கண்களுமுள்ள ஓர்புலியானதுன்கண்
ணுக்கெதிராகெனது மனைவிக்கு வருத்தத்தைச் செய்துயிரைவாங்
கிருகையிற்ப்போகவும் பிடித்தவில்லுந்தூணியிலிருந்தெடுத்த அம்பு
மேந்திக்கொண்டு நின்றாயாதலாலுன்னரசியலுக்கொப்பான வரசிய
ல்வே றொன்றுமுளதோ பன்னீராயிரம் யானைப்பலம் உனக்கிருக்கி
ன்றது அப்பலத்தினை பருந்து களைக்கூட்டமாய்ச் சேர்க்கும் ஒளித
ங்கியவடிவேலையுடைய பகைமன்னரிடத்திற் கொடுத்துவிட்டுப்பயம்
பெற்றுக்கொண்டனையோ, சிறுசெடிகளால் நெருங்கப்பட்டுமரங்கள்
மேலோங்கியிருக்குமிந்தப் பெரியகாட்டில் உதிரஞ்சேறுபடும்படிபி
லம் போன்றவாயையுடைய புலியானதுதொடர்ந்தென் மனையாளை
ப்பிடித்துக் கொண்டுபோய்விட்டதே அதனைத்தடுக்காமலென்செய்
தாய் பகைவாஞ்சத்தக்கவேலாயுதமேந்தியவரசனே கொடுமையுள்ள
யிந்தக்காட்டிலுனக்கெதிரிலுதிரமுண்ணப் புலியானதுவென்மனையா
ளைக்கொல்லும் போது அப்புலியைக் கொல்லாமலுன்னுயிரைக் காத்
துக்கொள்ளும்பொருட்டுப்பயந்து நின்றனை கொடுமையுள்ள யெம
தூதர் வந்து போர்க் களத்திலிருக்கும்படி யுன்னெதிரிகள் வந்து வெ
வ்வியதான்யுத்தஞ்செய்தால் அச்சமையத்தில் நடுங்காமல் பகைவரை
த்துரத்தி உன்னரசாக்ஷியை நிலைநிருத்துவையோ பெண்பிறப்பாகியு
ம் அப்பிறப்பிலும் பிராமணத்தியாகியுமுனக்கு அபயமென்று முறை
யிட்டவளைக்காக்க வேண்டுமென்றுன்மனதிலெண்ணாமல் கொல்லும்
புலிக்காகாரமாகக்கொடுத் துவிட்டுன்னுயிரைக்காத்துக் கொண்ட
யெழ்மையுள்ளவரசனே பலத்தினிற்குறைந்து மின்னமும்பிராணனை

வைத்துக் கொண்டு ஊராளவெண்ணுகிறாயோ பகைவர்களிழிவாகப் பேசுவார்களேயதற்கு காணமுறாயோ வென்றிவ்வாறு பலபலதூஷணமானவார்த்தைகளையவனடுங்கும்படி சொல்லினான். இவ்வாறு அப்பிராமணன் சொல்லவே அரசனமதிமயங்கி வடிவேலைப்பாய்ந்த மார்பிலெறிந்தது போலப்பிராமணஸ்திரியை புலிகொன்ற கொடும்பழியுமந்தணன் சொல்லுங்கடுமையான வார்த்தையுமப்போதே மனதைவெதுப்பநீங்குதற்கரிய துக்கசாகரத்திலழுந்த வருந்துந்தோறுமவ்வரசனிந்த அரசாக்ஷியையும் செல்வத்தையும் ஒழித்து விட்டிறக்க வேண்டுமென்கிற வெண்ணமுள்ளவனாய்ப் பிராமணர்களுக்கு நேரிட்ட இடரைநீக்காத அரசனோர் மிருகமேயல்லது அரசனாகானென்று வேதஞ்சொல்வதை ஆதியிற் கேட்டறிந்து மிப்போது பிராமணனுக்கு நேரிட்டவிடத்தில் பயந்து நின்றே உயிரைத்தாங்கிக் கொண்டிருப்பது இந்தமட்டிற் போதுமல்லது உயிரைச்சுமந்து கொண்டிருந்தாலும் பழிவருமேயல்லது புகழுண்டாவதில்லை யாதலால் தீங்கைத்தருகிற இந்த வாழ்விலிருப்பதைப் பார்க்கிலும் உயிரைவிடுவதே நன்மையாகும், புகழுண்டாகும், மென்றிவ்வாறெண்ணியவ்வேதியனுடைய பாதத்தில் அகன்றமார்பும் ரத்தினங்கள்பதித்த மகுடமும் பூமியில்ப்படும் படிபணிந்து ஐயரே, துன்பப்படவேண்டாமென்று சொல்லி பலமென்ப தொன்றுமில்லாத தமியேன் தீகசகத்தில் விழுகின்றேனென்னது, தேசமுங்குலமும், திரவியமும், தேவரீர் வசமாக ஒப்புவித்தேனென்று சொன்னான். அவ்வாறு சொல்லக்கேட்டப்பூசுரன் கண்ணொளியிழந்தவனும் வன்மையிழந்தவனும் பிக்ஷையெடுப்பவனும், சுகமிழந்தவனும், பாபத்தினாலூமைத்தன்மையுடையவனும், பூணூலிழந்தவனும், மனைவியையிழந்தவனும், இம்மைப் பயனிழந்தவனுமாயிருப்பன் விசனம் நீங்கிச்சொல்லத்தக்கதெனனிருக்கின்றது அரசனே யென்னுடையதுயரம் நீங்கிப்பிராணனை வைத்துக்கொண்டு நான் தவங்கள் செய்யவேண்டுமென்கிற யெண்ணமுனக்கிருக்குமானால் உன்னுடைய தர்மபத்தினியாகிய கீர்த்திமாலினியையெனக்குக்கொடுக்கவேண்டுமென்று சொன்னானப்படிச்சொன்னவுடனந்தக்கொடியவார்த்தையானதரசனுடைய மார்பில்வேல் தைத்தது போலிருந்ததினால் ஐயரே தர்மத்துக்கு மாறான இழிவுள்ள

வசனஞ்சொன்னீரிவார்த்தை சொல்லலாமோ பிராமண சிரேஷ்டனே
ஒலிக்குமோசையுடையதாய்த்தெளிவுள்ளகடல் சூழ்ந்தஇவ்வுலகில்
அரசர்களாயிருப்பவர்கள் பிராமணர்கள் பொருட்டுத் தங்களுயிரை
க்கொடுப்பார்கள், மிகுந்த திரவியங்கொடுப்பார்கள் உபசாரவார்த்தை
சொல்லுவார்கள், விரைவாகச்செல்லுங்குதிரைகட்டியதேர்கொடுப
பார்கள், குதிரைகள், யானைகள், கொடுப்பார்கள் இவ்வண்ணமேயல்லது
இல்லறத்திற்குத்துணையாகிய மனைவியைக்கொடுத்து புகழ்படைத்த
அரசர்களுண்டாயிருந்தால் சொல்லுமென்றான். செங்கோல்மாறாத
வரசனிவ்வாறு சொல்லிச்சொல்லானது காதிற்பட்டமாத்திரத்தில்
பிராமணன்கோபத்துடன் பார்த்துக் கொடுங்கோல்செலுத்த இரா
சாங்கஞ்செய்யுமரசனே பிதுநாளெனக்கு பாபஞ்சம்பவிப்பதாயிருந்
தாலுமதுதொடாத வண்ணம் சாந்திசெய்து கொள்ளவென்றலா
குமாதலாலுன் மனையாளைக் கண்டு கொடாவிட்டால் பாவிகளையுண்
ணத்தக்கநரகில் விழும்படி உனக்குச் சாபங்கொடுப்பேனினியெ
ன்னசொல்கிறாய் சொல்லெனறான். அப்பிராமணன் சொலலுஞ்சுடு
சொல்லாகிய வாளினால் பிளக்கபட்டமனம் வெதும்பியழுதழுது
பூமியில் விழுந்து விழுந்து பின்னுமெழுந்து கண்ணீர்தாரைக்கடல்
போல்பெருக அதிலாழ்ந்தழிந்தொன்றுந்தோற்றாத மனமுள்ளவனா
யழியாத கற்புநிலையுள்ள இவளைப்பிராமணனுக்கு கொடுத்தால்
வசைவந்து நேரிடுமல்லது மறுத்துவேறாகச்சொன்னால் பிராமணன்
சாபங்கொடுப்பான்பரமசிவத்தின் திருவருள்யெவ்வாறிருக்கின்றதோ
தெரிந்திலன். பொல்லாதநரகத்திலுயிர்விழுகிறதென்றாலதுவெளிதய
னதலலவேயாதலால் மனையவளை விரும்பிக்கேட்கிற பிராமணனுக்
குக்கொடுத்து வொளியுள்ளாத்திருபாணங்களணிந்த மன்னவர்களி
ந்தச் சேதியைக்கேள்விப் பட்டுச்சந்தோஷிக்கவும், கல்வியுணராத
மாந்தர்கள் இழிவுசொல்லவும், அக்கினியில்விழுவேனென்று தனக்
குளெண்ணிக்கொண்டு கோபங்கொண்டிருக்கும் வேதப்பிராமணரே
இவளையுமக்குக்கொடுத்தேன், கொடுத்தேன், தீர்வாசமாயிருக்கும்
நகரத்திற்குக்கொண்டேகுமெனச்சொல்லி கற்புள்ளமனைவியைப்பா
ர்த்து தாயே, யிப்பிராமணனுடன் போவென்று சொல்லித்துதித்து
உண்ணுமமிர்தம் போன்றவாசகன் விரைவாகத் தீவளர்த்து கண்ணி
லிருந்து நீர்வருதலைமாற்றி மனதையொருவழிப்படுத்தி தெளிவுள்ள

நீரில்ஸ்நானஞ்செய்துவந்து பஞ்சாக்ஷரத்தை யுள்ளேயுச்சரித்துக்கொண்டு ஆகாயத்தில்ச்செல்லும் சூரியனும் வெப்பங்கொள்ள சிகை விட்டெழுகிற தீயிலன்புடன்விழவொருமைப்பட்டுத்தீக்குண்டத்தை பிரதெக்ஷணஞ் செய்யும்போது ஐந்து திருமுகங்களும் பிரகாசிக்கவும் விளங்குகின்றசெஞ்சடையில் இளந்திங்கள் ஒளியுடன்பிரகாசிக்கவுமதன்மத்திகளில் கொன்றைப்பூங்கொத்துகளிருந்தசையவும் கொக்கிரகு மறுகுஞ்சிந்துகின்ற குளிர்ச்சியுள்ள, துளியையுடைய கங்காதேவியும் பிரகாசிக்கவும் திரிநேத்திரங்களும் பிரகாசிக்கவும் வொலிக்குஞ்சங்கந்தவழுங்கடலினிடத்து, வாசுகிகக்கியவிஷபானஞ் செய்து கறுத்தகாலகண்டம் நீலரத்தினம்போல் விளங்கவும் நிறைந்துள்ள பதினான்குலோகங்களும் அவைகளையன்றி மற்றபுவனகோடிகளை யெல்லாம்பெற்றுங் கன்னியாயிருக்கும் உமையவளிடப்பாகத்தில் விளங்கவும் பவளமலையில் கருமேகம்படிந்திருப்பதுபோல் யானைத்தோற் போர்வை திருமேனிபோர்ப்பவும் விளங்குகின்றபுலித்தோலையுடுத்த தன்மேல்சர்ப்பக்கச்சணியட்டுத் தொங்கியசையவும் தாவள்ளியமானவிபூதி திரிபுண்டரங்களும்பிரகாசிக்கவும் அரம்பாஸ்திரிகள் நடனஞ்செய்யவும் சிறந்த தாளியகுடமுழாவொலிக்கவும் திரிபுரதகனஞ்செய்யும் போதமைந்த தேரினச்சுமுறியக்கண்டு யெதிரில்வந்து நடித்ததாகியஇளமையும் வெண்மைநிறமுள்ள திருமாலாகிய ரிஷபவாகனத்தின்மேல் ஆரோகணித்துக்கொண்டுகொய்த திருப்பள்ளித்தாமங்கொண்டு குளிரும்படி திருவடியில் அர்ச்சிப்பவர்களுக்கெளிதாக மோக்ஷமருளுங்கிருபைக்கடலாகிய பரமசிவன் தரிசனங்கொடுத்தார். அரசனானவன் தன்கண்களுமனமுங்குளிரும்படி தரிசித்து நிச்சயமாகப் பிறவிப்பகையாயுள்ள நம்முடைய வினையையொழித்தோமென்றுவெண்ணித் தேவர்களுண்ணுமமிர் தமுண்டவொருவன்களிப்பது போற்களித்து ஆகாயமும் பூமியுமற்ற வைகளுமாய் நிறைந்துள்ள பரமசிவத்தின்றிருவடியிற்பணிந்தான்.

தேவாதிதேவனைச் சிற்குணனையற்புதனை
மூவாமுதலாய் முழுப்பொருளாய் நின்றானை
காவாய்பிறவிக்கடனீந்திக் கையிளைத்தே
னாவாயெனவேநின்னிணை மலர்த்தாள்பெறநேனே,"

சிவஞான தீபிகை வசனம்.

இவ்வாறு தோத்திரஞ்செய்து பணிந்தவரசனை மாறாத அன்ப
முதிர்ந்தவனே யெழுந்திருவென்று தன் திருவடியிலப்பணிந்தவனை த
திருக்கரங்களால் லெடுத்தருளியன்பனே உன்னுடையபத்திநிலை
யெல்லாருமறியத்தக்கதாக நாமேபிராமணனாகவந்தோம் தனக்குநிக
ரில்லாத பிராமணஸ்திரியாகவந்தது பொன்மயமானமேனியையுடைய
மலையரையன்புத்திரியாகிய பார்வதிதேவியாம் இங்ஙனம் பிராமண
ஸ்திரியையடித்துத்தூக்கிக்கொண்டுபோன விரமுள்ள புலியோ மா
யையாகும் நீயுன்மனதிற்கவலைப் படவேண்டியதில்லை நீயுமுன்மனை
வியுமெம்மையும் உமையவளையும் பூசித்ததினால் உள்ளத்தில் மகிழ்ந்
தேன் உனக்குவேண்டிய வரங்கேளென்றான் உடனேபார்பதிதேவி
யாருடன் சுவாமிகள் யெழுந்தருளியதுவெளிதானதோ துயரக்கட
லைநீந்திய அடியேற்கு கேட்கவேண்டியவரமும் வேறேயிருக்கின்ற
தோ நீயிவரம்மைக்கடந்து நின்ற அடியேனும் யெனதுமனைவியுமடி
யேன்தாயும் தகப்பனும் யெங்களைக்காத்தாக்ஷித்த வணிகேசனும
வன்புத்திரனும் தேவரீருடைய திருவடிமலரைச்சேரும்படிய்நுன்
செய்யவேண்டுமென்றனளவில் அரசன்தேவியானவள் சுவாமியைநோ
க்கி எங்களாண்டவனே அடியாளைப்பெற்ற சந்திராங்கதனும் சீமந்தி
னியும்தேவரீர் திருவடிகளையடையும்படியருள்செய்யவேண்டுமென்ற
னள் யெல்லாப்பொருளுநாமாயிருக்கும் கைலாசபதியானவர் அவர்
கள்சொல்லியவரமருளிச்செய்துபார்வதிதேவியாருடன் யெழுந்தரு
ளிவிட்டனர் பத்திராயுவரசன் தன்மனைவியுடன் தேறிதேற்றிக் கொ
ண்டு தன்னழகியபதியிற் சேர்ந்து பதினாயிரம் வருஷம் பூமியைக்கா
த்து அரசுசெய்து தன்புத்திரனுக்கு அரசாக்ஷியைக்கொடுத்துவி
ட்டு தன்மனையாளுடன் திருமாலும்பிரமதேவனுங்காணாத வேதாந்
தப்பொருளாகிய மோக்ஷத்தைதயடைந்தான்.

வேயனையமென்றோள் விளங்கிழையினோடே திர்ந்த
பாயும்விடையோன் வரமளித்த பான்மையினான்
தூயனுநான்முகனுந்தேரா மறைமுடியின்
சேயபதந்தேவியோடு நேர்வேந்தன்சேர்ந்தானே.

சுபம் சுபம்

முற்றுப் பெற்றது

பிழை திருத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
3	7	கிலே	சிலே
	16	பஞ்சான்ன்	பஞ்சானன்
4	9	பாடலே	பாடி
6	3	வளததற்	வளர்ததற்
	27	சீரித்து	சிரிதது
7	2	விடத்து	யிடத்து
	30	றேடி	தேடி
8	11	ஆண்	ஆன்
	12	வண் - வன்	வன - வன
	20	ஹற்	ஞற
10	14	புனே	புணே
	21	புனே	புணே
11	6	துவ்	துள்
13	16	காணி	கானி
14	14	நம்	நர்
	34	காய்து	காய்ந்து
	34	பெநி	பெரி
16	10	தொணி	துணி
18	27	புகுட்	புகுந்
20	21	மத்	மந்
38	20	நிலலே	நிழலே
44	4	பாத	பாற்
	11	குருணி	குருவை
50	15	நோபங்	கோபங்
51	3	சிம்பம்	சிம்மம்
	10	தொணி	தொனி
52	22	ணென	னென
		தனள்	தனன்
	23	பேனும்	பேணும்
		னென்று	னென்னு
	29	தம	தரும
53	4	தாரதனே	தாராதனே
	16	மகு	மரு
55	4	மகு	மரு

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
56	3	யினு	யிறு
57	16	காட்டிட	காட்டினிட
	25	கத	கா
58	20	மட்ன்னவ	மன்னவன்
	22	கர்ணம்	கானம்
59	5	கோர்வை	கொவ்வை
	10	சாகுபடி	சாகுப்படி
	16	தொடர்ந்து	தொடர்ந்துவந்த
60	8	யிட்	யித்
63	16	சணியட்டு	சணியப்பட்டு
64	6	வந்து	வந்தது

PRINTED BY
K. RAMASAMY PILLAI
Propretor of
THE "LAKSHMI VILLASAM" PRESS,
SATTUR.